அருளோசை

திருவள்ளுவ
ஆண்டு 200
தை
1974 சனவரி

சமய பாட போதனைத் திங்களிதழ்

பொங்குக பொங்கல்

பொங்குக பொங்கல்! மங்களப் பொங்கல்!
பொதுமையும் புதுமையும் புரட்சியும் பெற்றுத்
தங்கத் தமிழர் தண்பெரு வாழ்வு
தழைத்தோங் கிடவே, தைத் தமிழ்ப்பாவை
மங்காப் புகழொடும் மகிழ்வொடும் வருக!
வான்புகழ் வள்ளுவ ராண்டின் பிறப்பால்
எங்கும் பரவுக இன்தமிழ்க் கொள்கை!
இன்பப் பொங்கல்! எங்கும் பொங்குக!

பழ-தரும-ஆறுமுகம்.



தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

"அருளோசை"

தொலைபேசி எண் : 76828

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
ஆழ்வார்பேட்டை,
சென்னை-600018.

CALENDAR 1974

January

S		6	13	20	27
M		7	14	21	28
T	1	8	15	22	29
W	2	9	16	23	30
T	3	10	17	24	31
F	4	11	18	25	
S	5	12	19	26	

February

S		3	10	17	24
M		4	11	18	25
T		5	12	19	26
W		6	13	20	27
T		7	14	21	28
F	1	8	15	22	
S	2	9	16	23	

March

S	31	3	10	17	24
M		4	11	18	25
T		5	12	19	26
W		6	13	20	27
T		7	14	21	28
F	1	8	15	22	29
S	2	9	16	23	30

April

S		7	14	21	28
M	1	8	15	22	29
T	2	9	16	23	30
W	3	10	17	24	
T	4	11	18	25	
F	5	12	19	26	
S	6	13	20	27	

May

S		5	12	19	26
M		6	13	20	27
T		7	14	21	28
W	1	8	15	22	29
T	2	9	16	23	30
F	3	10	17	24	31
S	4	11	18	25	

June

S	30	2	9	16	23
M		3	10	17	24
T		4	11	18	25
W		5	12	19	26
T		6	13	20	27
F		7	14	21	28
S	1	8	15	22	29

July

S		7	14	21	28
M	1	8	15	22	29
T	2	9	16	23	30
W	3	10	17	24	31
T	4	11	18	25	
F	5	12	19	26	
S	6	13	20	27	

August

S		4	11	18	25
M		5	12	19	26
T		6	13	20	27
W		7	14	21	28
T	1	8	15	22	29
F	2	9	16	23	30
S	3	10	17	24	31

September

S	1	8	15	22	29
M	2	9	16	23	30
T	3	10	17	24	
W	4	11	18	25	
T	5	12	19	26	
F	6	13	20	27	
S	7	14	21	28	

October

S		6	13	20	27
M		7	14	21	28
T	1	8	15	22	29
W	2	9	16	23	30
T	3	10	17	24	31
F	4	11	18	25	
S	5	12	19	26	

November

S		3	10	17	24
M		4	11	18	25
T		5	12	19	26
W		6	13	20	27
T		7	14	21	28
F	1	8	15	22	29
S	2	9	16	23	30

December

S	1	8	15	22	29
M	2	9	16	23	30
T	3	10	17	24	31
W	4	11	18	25	
T	5	12	19	26	
F	6	13	20	27	
S	7	14	21	28	

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச தை 1974 சனவரி	ஓசை 7

"அருளோசை" அன்பர்களுக்குப் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தித்திக்கும் சர்க்கரைப் பொங்கல் பொங்கி வழிகிறது. அதுகண்டு நம் மனத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. வழிகாட்டும் தைத்திருமகளின் வரவால் இளவல்கள் உள்ளம் பூரிக்கின்றது. வள்ளுவராண்டின் பிறப்பால், தொடக்கம் இல்லாத பழைமையும், முடிவில்லாத புதுமையும், பாழ்படாத பசுமையும் கொண்ட தமிழ்த்தாயின் திருக்குறள் வையகமெங்கும் ஒலிக்கிறது.

விதையை வயலிலே விளைத்த நாள்முதல் கண்மணியினும் பேணிக் காத்து வந்த வேளாண் குடிமக்கள், அதன் பக்குவம் அறிந்து அறுத்தெடுத்து, பலன் கண்டு உள்ளம் பூரித்துத் தமக்கே உரிமையான நன்றியுணர்வோடு, தம் உயிரினும் மேலாகப் பேணிவரும் உழவுத் தொழிலுக்கு வழிபாடு செலுத்த, கலப்பைக்கும், மேழிக்கும், மண்வெட்டிக்கும், அரிவாளுக்கும் திருநீறு பூசிப் பொட்டிட்டு, தம் உற்ற தோழனுகப் பணி புரிந்துவரும், காளைமாடுகளைக் கழுவிக், கொம்புக்கு வண்ணங்கள் பூசி, மஞ்சள் குங்குமம் இட்டு, வீட்டைப் "பொலிய நீவி" வேப்பிலைக் காப்புக் கட்டி, வாசலிலே கோலமிட்டுச் "சிறப்புடைத் தீபம் ஏற்றி," பூரிப்பைக் காட்டப் புத்தாடை புனைகிறார்கள். பொலிவைக் காட்டப் பொங்கலிடுகிறார்கள். புலமையைக் காட்டத் தென்பாங்குப் பாட்டிசைக்கிறார்கள். தமிழ்த்தாயும், தமிழ்நாடும், தானும், தன்மனைவியும் குழந்தைகளும் சுற்றமும் நட்பும் சுகம்பெறத், திருவருளை வேண்டுகிறார்கள். பருவ காலங்கள் தவறாதுபயன் தரக் காரணமான சூரியனை நோக்கிப் பொங்கலிட்டு வணங்கி உண்டு மகிழ்கிறார்கள்.

இரவில், பூரண நிலவில், "காளைகளைத்" தம் போக்கில் மஞ்சுவிரட்டில் ஓடவிட்டு, வீர உணர்வோடு அதனை அடக்கி வெற்றிப் பெருமிதத்தோடு பரிசு பெற்றுப் பவனி வருகிறார்கள்.

கேட்டது கிடைக்கிறது. வேலைகள் தொடருகின்றன. விளைவுகள் பெருகுகின்றன, காலச்சக்கரம் சுழல்கிறது. வாழ்க்கை வண்டி ஓடுகிறது. தான் செல்லும் வழியில், ஒரு குறிப்பிட்ட எல்லையை அடைந்ததும், இவ்வுயிர் தான் இறைவனிடம் சென்றடையத் தன்னை வழிப்படுத்திய உடலின் உறவை விட்டுவிட்டு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவனாகிய இறைவன் திருவடிகளில் இரண்டறக் கலந்து விடுகிறது.

உடல் வளரக் காரணமான உணவைக் கொடுக்கும் உழவுத் தொழிலுக்கும், அதனோடு தொடர்புடையவைகளுக்கு மட்டும் வணக்கமும் வாழ்த்தும் போதுமா?

உடலின் ஒவ்வொரு அசைவுக்கும் காரணமாய், கண்ணுக்குப் புலனாகமல் கலந்திருந்து ஆட்டிவைப்பது உயிர்; அந்த உயிரினுள் உயிராயிருந்து அருள்பாலிப்பவன் ஆண்டவன்; இவ்வுயிரானது ஆண்டவனோடு இரண்டறக் கலந்து அமைதிபெறத் தக்கபடி நம்மைப் பக்குவப் படுத்துவன நம் சமய நெறிகள்.

தெய்விகப் பேரவை அவ்வருள் நெறியைப் பரப்பும் ஒப்பற்ற பணியை மேற்கொண்டு தொண்டாற்றி வருகிறது. அந்தப் பெரு முயற்சியின் ஒரு பகுதிதான் "அருளோசை". அதற்குத் தங்களைப் போன்றவர்கள் காட்டும் ஆதரவும் ஆர்வமும் கண்டு எங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது.

தமிழர் திருநாளான இப்பொங்கற் பெருநாளில், நோயின்மை, கல்வி, தனம், தானியம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி, ஆகுநல்லூழ், நுகர்ச்சி என்ற தொகைதரு பதினாறு பேறும் பெற்று, வளமோடு வாழ, முத்தமிழ்க் கடவுளான முருகப்பெருமான் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

1. திருவளர் செல்வனுக்கு 187
2. அரிவாட்டாய நாயனார் 190
3. வள்ளுவர் வழியில் 191
4. திருவொற்றியூர்க் கோயில் 195
5. சிவ லிங்கம் 197
6. சந்தான குரவர் வரலாறு 201
7. சேக்கிழார் புராணம் 205
8. காமனைக் காய்ந்த கண்ணுதல் 209
9. இராமாநுசர் 213



நல்வாழ்த்துக்கள் !

கடந்த நான்கு திங்களாக உனக்கு எழுத இயலாமற் போய் விட்டது. அது குறித்து மிகவும் வருந்துகின்றோம். அலுவல்கள் மிகுதியே காரணம். இனி, தவறாது எழுதுவோம்.

சென்ற ஆகஸ்டு இதழ்க் கட்டுரையைப் படித்து நினைவூட்டிக் கொண்டு இந்தக் கட்டுரையைப்படி. பௌத்த சமயமும் நம்முடைய இந்து சமயமும் அடிப்படையிலேயே மாறுபாடுடையன. அதாவது, என்றும் உள்பொருள் என்பதில் மாறுபாடு உண்டு. குறிப்பாகப் பௌத்த சமயம் கடவுள் நம்பிக்கையுடையதல்ல. ஏன்? கடவுள் காட்சிப் பொருளல்ல என்பது பௌத்தத்தின் கொள்கை. நம்முடைய இந்து சமயத்தின் கடவுள் நம்பிக்கை, சான்றோர் வழிப்பட்டதேயாம். மாணிக்கவாசகரும் ''கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை'' என்பார். கடவுளைக் கண்டு நம்புதற்குரிய சாட்சியங்களைத் தந்து ''உண்டு'' என்று உணர்த்துதல் இயலாது. கடவுள் நம்பிகைக்கு யூகம் அதாவது, உய்த்துணர்தல் கூட எளிதாகப் பயன்படாது. சான்றோர் சொல்வழி ''கடவுள் உண்டு'' என்று நம்பிய பிறகு, அந்த நம்பிக்கையை விளக்க வேண்டுமானால் யூகங்களும், யுக்திகளும் பயன்படலாம். சான்றோர் சொல்வழியில் நம்பிக்கையில்லாது போனால் யூகமும், யுக்தியும் பயன்படா. அறிவு, கடவுளுண்மையை நேரிடையாகத் தராது. கடளுண்மையைப் பெற்றவழி, அறிவு, அந்நம்பிக்கையை உறுதிப்படுத்தத் துணை செய்யும்; அனுபவத்திற்குக்

கொண்டு வந்து தரும். ஆனால், அறிவே கடவுள் நம்பிக்கையைத் தராது; தரவும் முடியாது. ஒரோவழி அறிவு தன்னிச்சையாகச் சான்ரோர் மரபுவழி வளராமல்-வளருமானல் கடவுள் நம்பிக்கைக்கு மாருகவும் கூட அது வளரும். அங்ஙனம் தோன்றிய நெறிகளுள் ஒன்றுதான் ‘உலகாயதம்’ என்பது. அறிவு, கடவுளை நம்புவதற்கோ, காண்பதற்கோ பயன்படாது. கடவுள் நிறைபொருள். அறிவோ என்றும் எப்பொழுதும் குறைவுடையது. அறியாமை வேறு, அறிவு வேறல்ல. அறிவிலேயே அறியாமை இருக்கிறது. அதாவது. அறியத் தொடங்கும்பொழுது அறியாமையும் தொடங்குகிறது, அறிய அறிய அறியாமை வெளிப்படும். திருவள்ளுவர் “அறிதோறு அறியாமை” என்பார். குறையையுடையதாக நிறைவே பெறமுடியாத நிலையிலுள்ள அறிவு எங்ஙனம் நிறையைக் காணமுடியும்? பௌத்தத்திற்குச் சான்ரோர் சொல் வழியில் நம்பிக்கையில்லாததால் அது கடவுளை நம்புவதில்லை. நம்முடைய சமயம் முன்னோர் சொல்லைப் பொன்னேபோல் போற்றும் இயல்புடையதாதலால், முன்னோர் சொல்வழிக் கடவுளை நம்புகிறது.

கடவுள் உண்டு என்ற கொள்கை இல்லாது போனல் ஏற்படும் மாற்றங்கள் பலப் பல. நமது இந்து சமயம் உயிர்களுக்குப் பிறப்புக்கள் பல உண்டு என்ற நம்பிக்கையுடையது. ஒரு பிறப்பில் உயிர்கள் செய்த வினைகளின் பயன்களை அந்த உயிர்கள் மறுபிறப்பில் அனுபவிக்கின்றன என்பது நமது சமயக்கொள்கை. வினைகளின் பயனை அனுபவிப்பதில் அல்லது அனுபவிக்காது விடுவதில் உயிர்களுக்குத் தன்வயப்பட்ட உரிமை இல்லை. அப்படி உயிர்களுக்கு உரிமையிருக்குமானல் தீவினைகளை உயிர்கள் துணிந்து செய்யும்; மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யும்; தனக்கு அதனல் கேடில்லை என்று கருதும். ஆதலால், உயிர்களின் உரிமையாக இருக்குமானல் வினைப்பயன்களைத் தாமே அவை சென்றடையா, அதற்குரிய உடலையும் தாமே வலிந்து எடுக்கா. ஆதலால், உயிர்கள் செய்யும் வினைப்பயன்களைப் பல்வேறு பிறப்புக்களிலும் கூட்டி அனுபவிக்கச் செய்தல் இறைவனுடைய தொழில், நமது சமயத்தில் ‘படைத்தல்’ என்ற சொல்லுக்குப் பொருள், தோற்றுவித்தல் என்பதல்ல. உயிர்களுக்கு வினைவழிப்பட்ட

இன்பதுன்பங்களைச் சேர்ப்பித்தலும், அவற்றைஅனுபவித்திற்குரிய வாயில்களைச் சேர்ப்பித்தலும் என்பதேயாகும். உயிர், பழவினையைத் துய்க்கும் பொழுது, புதுவினைகள் செய்யா வண்ணம் தடுத்தாட்கொள்வதும் இறைவனின் தொழில். உயிர்கள் வினைத்தொடர்பிலிருந்து முற்றுக நீங்குகிறவரையில் துணையாக நின்று, துறவு நெறிப்படுத்துவது இறைவனின் கருணை நிறைந்த தொழில். பௌத்தர்களும் பல பிறப்புக்கள் உண்டு என்று நம்புகின்றனர்; பிறப்புக்களில் வினை தொடர்கிறது என்பதையும் நம்புகின்றனர். பௌத்தர்கள் உயிர்களை அவைகள் செய்த வினைகளே வந்தடையும் என்று நம்புகின்றனர். வினை, உயிர்த்தொடர்பு இல்லாதது. அதற்குத் தனியே இயக்கமில்லை. ஆதலால் வினை, உயிர்களைச் சார்தல் என்பது இயலாதது என்பதைப் பௌத்தர்கள் அறியாதது ஏன்? பௌத்தர்கள் இதனை அறியாதது விளங்காத—புரியாத ஒரு புதிர். உயிர்கள் விழைவின் வழியும், விருப்பத்தின் வழியும் இயங்குவன. உயிர்களின் விழைவுகளும் விருப்பங்களுமே வினைகளின் தோற்றக்களன். அவைகளே உயிர்களைப் பிறப்பில் பிணைக்கும் தளைகள். தளைகளிடைத் தாமே விழும் உயிர்கள் எங்ஙனம் கடவுளின் துணையின்றித் தளைகளை நீக்கிக் கொள்ள முடியும்? ஆனல், பௌத்தர்கள் முடியும் என்று நம்புகின்றனர். அஃது இயற்கைக்கு மாறுன கொள்கை. பௌத்தம் கடவுள் நம்பிக்கை இல்லாத சமயம். ஆதலால், பக்தி, வழிபாடு போன்ற ஒழுக்கங்கள் பௌத்தத்தில் இல்லை. அடுத்த கடிதத்திலும் பௌத்த சமயத்தைப் பற்றி மேலும் சில உண்மைகளை ஆராய்வோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி அடிகளார்

"பகுத்தறிவு பெற்ற மாந்தர்களாகிய நாம் அவ்வறிவினைப் பயன்படுத்தாமல் நடப்பமானல், நாம் இச்சிறந்த பிறவியினைப் பெற்றது எதற்கு? உண்டு, உடுத்து, உறங்கிக் கழிவதற்கா? எனச் சிறிதாயினும் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.
—மறைமலையடிகளார்.

அரிவாட்டாய நாயனர்

—:×:—

பொன்னிவளம் பெருக்கும் சோழவள நாட்டில், கணமங்கலம் என்னும் ஊரில், தாயனர் எனும் திருப்பெயர் கொண்ட ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானுக்குச் செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் கொண்டு, இன்னமுதாக்கி படைத்து வந்தார். இவ்வாறு தொண்டாற்றிவரும் காலத்தில் வறுமை வந்துற்றது. பின்னும் அவர் கூலிக்குச் செந்நெல்லறுப்பவராகிக் கூலியாகக் கிடைத்த செந்நெல்லையெல்லாம் இறைவனுக்குப் படைத்துத் தாம் கார்நெல்லைக் கொண்டு வாழ்ந்து வந்தார். கூலி முழுவதும் செந்நெல்லே ஆக, தாம் செய்த புண்ணியமென்று கருதி; முழுவதையும் இறைவனுக்குப் படைத்துத் தாம் இலைக்கறியுணவுண்டு வந்தார். தோட்டத்திலிருந்த இலைகளும் அற்றுப்போக, நீர்மட்டும் அருந்தி இறைத்தொண்டு செய்து வந்தார்.

ஒருநாள் வழிபாட்டிற்கு வேண்டிய செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் கூடையிலேந்தி தாயனர் முன்னே செல்ல, அவர் துணைவியார், ஆனைந்தும் ஏந்திப் பின்சென்றார். அப்படிச் செல்லும் போது, நீர்மட்டும் அருந்திப் பட்டினிகிடந்தமையால் கால் தளர்ந்து கீழேவிழப்போனர். அப்போது அவர் காதல் மனைவி, அவரைத் தாங்கிப்பிடிக்கவும், கூடையில் இருந்தவை யெல்லாம் கமரிலே சிந்திவிட்டது. "இறைவனுக்குத் திருவமுது செய்ய முடியவில்லையே?" என்று வருந்தி அரிவாளினலே தம்முடைய ஊட்டியை அரியத்தொடங்கினர். அவ்வளவில் பூமி வெடிப்பினின்றும் சிவபெருமான் திருக்கரமும், "மாவடு விடேல்! விடேல்!!" என்ற ஓசையும் உடன் எழுந்தது. அரிவாளைப் பற்றிய தாயனரின் கையை இறைவன் பிடித்துக்கொண்டான். தாயனர் துன்பம் நீங்கி மகிழ்வுற்றார். பின் இறைவன் விடைமேலராய்த் தோன்றி "நீ நம்மேல்வைத்த அன்பினலே செய்த செய்கை நன்றாயிருக்கிறது. நீ உன் மனைத்தக்க மாண்புடைய மனைவியோடு வந்து சிவலோகத்தில் வாழ்ந்திரு!" என்று திருவருள் புரிந்தார்.

இறைவனுக்கு இன்னமுது செய்ய முடியவில்லையே என்று வருந்திக் கழுத்தை அரிவாள் கொண்டு அரிந்ததால் தாயனர் அரிவாட்டாய நாயனர் ஆயினர்.

"அடியனேன் அறிவிலாமை கண்டும் என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில்வந்திங்கு அடிமைசெய் பரனேபோற்றி!
துடியிடை பாகம்ஆன தூயநற் சோதி போற்றி!
பொடியணி பவளமேனிப் புரிசடைப் புராண போற்றி!

—பழ-தரும-ஆறுமுகம்.

பிரமாதீச ஆண்டு தைத் திங்கள், 22-ஆம் நாள் (4-2-74) திங்கள் கிழமையன்று அரிவாட்டாய நாயனரது திருநட்சத்திரமாகிய திருவாதிரை.



அறிவு பெறும் வாயில்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அறிவு, வாழ்க்கைக்கு இன்றியமையாதது; மனித வாழ்க்கைக்குக் கடவுள் வழங்கிய பரிசுகளில் தலையாயது. ஆனால் இன்று எது அறிவு என்று இனம் தெரிந்து கொள்ளாமலேயே வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. ஏன்? பலரிடத்தில் அறியாமையே அறிவுபோலக் காட்சியளிக்கிறது. அம்மம்ம! தம்மிடமுள்ள அறியாமையையே அறிவென நம்பித் தலைதடுமாறி நிற்பவர்கள் இன்று ஆயிரம் ஆயிரம் பேர்! அவர்கள் அகந்தை கொண்டவர்களாக நடமாடுகிறார்கள். “ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு” என்று வள்ளுவர் கூறுகிறார். பன்றிகளைக் கட்டுத்தறியினின்றும் அவிழ்த்துவிட்டால் சந்தனக்குவியல் பால் நாடா, மலக்குவியலை நோக்கியே ஓடும். அதுபோல் அறியாமையையே அறிவென நம்பித் திரிபவர்கள் எதிலும் அறிவை நாடமாட்டார்கள்; ஆபாசங்களையே தேடுவர். அதையே விரித்து விரித்து உரைப்பர். ஆனால், தமது அறியாமையை மறைக்க “அறிவு, அறிவு” என்று சொல்லிக் கொள்வர். இஃது அறிவு என்ற பெயரில் உலாவரும் ஒரு வகை அறியாமை. வேறுசிலர், சில செய்திகளை அறிந்து கொண்டு அவற்றைக் கிளிப்பிள்ளைபோலச் சொல்வர். சொல்லும் செய்திக்கும் அவர்களுக்கும் உணர்வு அடிப்படையில் யாதொரு விதமான தொடர்பும் இராது. இதுவும் ஒருவகை அறியாமையே. வேறுசிலர், புத்தகங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பர். இவர்கள் ஒருவகையான அஜீரண வாதிகள். இவர்களுக்கு அறிவினுடைய வாசனையே இருப்பதில்லை. ஆதலால் உணர்வும் இருக்க வழியில்லை. கல்வி, அறிவு பெறுதற்குரிய வாயில்; ஆனால், கல்வியே அறிவல்ல. செய்தி அறிவு பெறுதற்குரிய வாயில்; செய்தியே அறிவல்ல. கேள்வி அறிவு பெறுதற்குரிய வாயில்; ஆனால், கேள்வியே அறிவல்ல. சிந்தனை அறிவு பெறுவவற்குரிய வாயில்; ஆனால், சிந்தனையே அறிவல்ல.

அறிவு என்பது நுட்பமானது; திட்பமானது. ஒருவர் அறிவுடையவர் அல்லது அறிவில்லாதவர் என்பதை அவருடைய பேச்சுக்களைக் கொண்டும் அறிய முடியாது. அவர் எழுதும் நூல்களைக் கொண்டும் அறிய முடியாது. அவருடைய வாழ்க்கையே அறிவையும் அறியாமையையும் காட்டும். அதாவது, யாதொரு வகையான துன்பத்தையும் தொடர்ந்து அனுபவிக்காதவர்கள் அறிவுடையோர்கள். அதுபோலவே பிறர்க்குத் துன்பம் செய்யாதவர்கள் அறிவுடையோர்கள். இதனை வள்ளுவம் 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று எடுத்துக் கூறுகிறது. அதாவது, உயிர்களைத் துன்பத் தொடக்கினின்றும் பாதுகாப்பதே அறிவு. இத்தகைய அறிவைப் பெறுதற்குரிய வாயில்களில் முதன்மையானது சிந்தனை.

அறிவு, புறத்தில் இருந்து மட்டும் பெறக்கூடியதல்ல. ஆன்மாவின் ஆழமான அடிமனம தொழிற்படுவதன் மூலம் சிந்தனை பிறக்கிறது அச்சிந்தனை அகத்தே நிகழும் உணர்வுப் போராட்டங்களைத் திறனாய்வு செய்கிறது. சிந்தனையுடையவன் வாழ்க்கையில் நாள்தோறும் புதுமை காணலாம். "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!" என்ற சொற்றொடர் சிந்தனையின் செழுமையைக் காட்டவல்லது. சிந்தனை இயல்பாகத் தொழிற்படாது போனால் சிந்தனையைத் தூண்டித் தொழிற்படுத்த நல்ல நூல்களைக் கற்றலாகிய கல்வி துணைசெய்கிறது. பாத்திரத்தைத் துலக்கல்போல ஆன்மாவைத் துலக்குவது கல்வி. கற்றல், மிகநுட்பமான ஒரு செயல்முறை. மனப்பாடம் செய்தல் நினைவுக்குப் பயன்படலாம். ஆனால், அது முழுமையான கல்வியாகாது. கற்கும் நூலை, அந்த நூலாசிரியன் உணர்வோடு ஒன்றிக் கற்க வேண்டும். எழுதப்பட்டவையெல்லாம் நூல்களாகா. அறியாமையின் மொத்த உருவம் எனத் திகழும் சிலர்கூட நூல்களை எழுதி விடலாம். அவை, மனித உருவில் நடமாடும் பேய்களைப் போல நூல்வடிவில் உலவும் "சைத்தான்கள்." இந்தச் சைத்தான்களைப் பிடித்துக் கொண்ட சிலர், ஆய்வுக்குரிய நூல் எது என்று முடிவு செய்யாமலே தவறான நூல்களை மையமாகக் கொண்டே பேய் பிடித்த மனிதர்களைப் போலப் பேசியும் எழுதியும் வருவர். இன்று பகுத்தறிவின் பேரால் பரப்பப் பெற்றுவரும் நாத்திகம் இதுவே. கார்ல்மார்க்சும் நாத்திகரே! லெனினும் நாத்திகரே! பழங்காலத்திலிருந்த புத்தர் கடவுள் நம்பிக்கையில்லாதவரதலால் அவரும் நாத்திகரே! ஆனால், அவர்களுடைய நாத்திகம் அறிவின்பாற்பட்டது; திறனாய்வுக்குத் தகுதியுடையது. அவர்களுடைய நாத்திகத்தால் மனித சமுதாயத்திற்குப் பெரிய கேடு வந்துவிடாது. காரணம், கடவுள் நம்பிக்கையின் பேரால் எத்தகைய நெறிமுறைகளை ஒழுக்கங்களைத் தோற்றுவிக்க முயற்சி செய்யப் பெற்றதோ அதுபோலவே மார்க்சீயம், லெனினியம் ஆகியவையும், ஒரு புதிய நெறிமுறைக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுக்கின்றன. எப்படிக் கடவுள் நம்பிக்கையுடைவன் மனித உலகத்திற்குக் கேடு செய்யும் ஒழுக்கக்கேடு உள்ளவனாக இருக்க முடியாதோ அதுபோலவே உயர்ந்த

கம்யூனிசக் கொள்கையுடையவனும் மனித உலகத்திற்குக் கேடு செய்யும் ஒழுக்கக்கேடுடையவனுக இருக்க முடியாது. ஆனுல், நம்முடைய நாட்டில் பரப்பப்படும் நாத்திகம் கொச்சைத்தனமானது. நல்லொழுக்கத்திற்கு மாருனது. இவர்களுக்குக் காதல், கற்பு என்பதெல்லாங்கூட வெறும் பேச்சுத்தான்! இவர்கள் தேடித்தேடித் தம்முடைய பேச்சுக்கும் எழுத்துக்கும் மோப்பம் பிடிப்பதெல்லாம் பெரும்பாலும் ஒழுக்கங்கெட்டவர்கள் எழுதிய கதைகள்தாம்! தப்பித் தவறி ஒன்றிரண்டு நல்ல நூல்கள் இவர்கள் கையில் அகப்பட்டு விட்டால் கருவாட்டுக்காரி கதை போல் பழக்கவாசனையால் ஆபாசத்தையே காண்கிருர்கள்; அல்லது ஏற்றுகிருர்கள்! இத்தகைய தவருன நூல்களைக் கற்பதைவிட கல்லாமை கோடி நன்மைதரும். காரணம் ஒரேவகையான அறியாமை மட்டுமே இருக்கும்! முறைபிறழ்ந்த உணர்வுகளும் மயக்கமுமே இருக்கும் நல்ல நூல்கள் கடவுளைப் போல் பாராட்டத்தக்கன. நல்லநூல்கள் நல்ல நண்பனைப்போல நல்லாற்று நெறிப்படுத்துவன. நல்லநூல்கள் அகனமர்ந்த காதலியைவிட இன்பமளிப்பன. நல்லநூல்கள் 'உயிர்க்கு உற்ற மருந்து' என்ற ஒரு மேலைநாட்டுப் பழமொழி உண்டு. ரஸ்கின் என்னும் ஏடுதேடு காதலர், "நூல்களைக் கற்கும் முயற்சியைவிட கற்பதற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் அதிக கவனம் தேவை" என்று வலியுறுத்துகிருர். நல்லநூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். நூலாசிரியன் உணர்வோடு ஒன்றித்துக் கற்க வேண்டும். நூலாசிரியன் காலத்திற்கும் கற்போன் காலத்திற்கும் உள்ள இடைவெளியை உய்த்தறிந்து காலத்தின் வளர்ச்சியினுல் ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்து கொள்ளவேண்டும். காலச்சுழலில் சிக்கிய நூலாசிரியன் கூறும் செய்திகளில் உள்ள நல்லனவற்றையே தேர்ந்தெடுக்கவேண்டும். தேனெடுக்கும் தேனீ, இதழ்களை எண்ணுவதில்லை எடுப்பதுமில்லை. மலர்ச் செடியின் கொம்புகளை-காம்புகளை எடுப்பதில்லை; எண்ணுவதில்லை. அதுபோலத்தான் நூலாசிரியன் படைப்புக்களில் நமக்குப் பயன்தரத்தக்க விழுமியவற்றையே ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்றையவற்றை மறந்து விடுதல் வேண்டும்.

அடுத்து, கற்கத் தகுதியுடைய நூல்கள்-கற்கும் நெறிமுறை ஆகியவைபற்றி ஆராய்வோம். (தொடரும்)

" தமிழ் மக்கட்கு உரிய கொல்லாவறம், அவர்கள் பண்டைக் காலத்தே வாணிகம் புரியச்சென்ற அயல் நாடுகளில் இருந்த அறிஞர்களாலும் மிகச்சிறந்ததாகக் காணப்பட்டு, அவர்களால் அக்காலத்திலேயே தழுவப்பட்டமை அந்நாட்டு வரலாறுகளால் நன்கறியக் கிடக்கின்றது.

—மறைமலையடிகளார்.



திருவொற்றியூர்க் கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

திருவொற்றியூர், சென்னை மாநகரின் எல்லைக்குள் உள்ள தேவாரப் பாடல் பெற்ற சிறந்த சிவத்தலங்களுள் ஒன்று. இது சென்னை மாநகரின் வடபகுதியில் சிறப்புற அமைந்து திகழ்கின்றது. தொண்டை நாட்டின் கண் உள்ள சிவத்தலங்களுள், திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர் என்ற மூன்றும் கடற்கரை ஓரத்திலுள்ள, நெய்தல் திணைக்குரிய தலங்கள் என்று சேக்கிழார் பெருமான், தமது பெரிய புராணத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

திருவொற்றியூர், அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் சைவ சமய ஆசிரியர் மூவர் பாடலும் பெற்ற, முதன்மையான சிவத்தலமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள், இறைவனின் திருவருள் துணையால், சங்கிலி நாச்சியார் என்பவரைத் திருமணம் செய்து கொண்டு, சிலகாலம் தங்கி வாழ்ந்திருந்த சிறப்புடையது இந்தத் தலம். "புவியுள் சிவாலயம் போலத் திங்கள் முடியார் அளித்த திருவொற்றியூர்" என்று, இதனைச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துப் புகழ்ந்துள்ளார். பிரளயகால வெள்ளம் இத்தலத்தின் மீது வரவொட்டாமல் ஒற்றியிருக்கும்படி செய்து, இறைவனால் காக்கப்பெற்றதனால், இதற்கு ஒற்றியூர் எனப் பெயரமைந்தது. மிகவும் பழமையான தலமாதலின், இதற்கு ஆதிபுரி என்றும் ஒரு பெயர் வழங்கும்.

இக்கோயிலின் மூலத்தானத்தில் இறைவன் சுயம்புமூர்த்தி (தான் தோன்றி)யாகப், புற்றுவடிவில் எழுந்தருளியிருக்கின்றார். ஆதலின் புற்றிடங்கொண்டார் (வன்மீகநாதர் என்பது, இங்குள்ள இறைவனின் பெயர்களில் ஒன்று. கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியிலும், அதை அடுத்த இரண்டு நாட்களிலும், புற்றின்மேல் உள்ள கவசம் எடுக்கப் பெற்று, புனுகு சட்டம் சாத்தப்பெறும்.

மந்தாதா என்னும் அரசன் ஒருவன், நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, எல்லாக் கோயில்களின் படித்தரத்தையும் சிறிது குறைத்துக் கட்டளை ஓலை அனுப்பினான் அப்போது இறைவன் அதன் கண் ஒருவரும் அறியாதபடி, அவ்வோலையில் வரி பிளந்து, 'ஒற்றியூர் நீங்கலாக மற்றையூர்க்கு இக்கட்டளை' என்று எழுதியருளினான். ஆதலின் இங்குள்ள இறைவனுக்கு எழுத்தறியும் பெருமான் என்றும்,

ஒரு பெயர் ஏற்பட்டது. இவ்வரலாற்றை, இற்றைக்கு ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன் விளங்கிய சேக்கிழார் பெருமான், "மருட்கொடும் தொழில் மன்னவன் இறக்கிய வரியை நெருக்கி முன் 'திரு வொற்றியூர் நீங்க' என்று எழுதும் ஒருத்தர் தம்பெரும் கோயில்" என்றும், "ஏட்டு வரியில் 'ஒற்றிநகர் நீங்கல்' என்னும் எழுத்தறியும் நாட்டம் மலரும் திருநுதலார் . . ." என்றும், தமது பெரிய புராணத்தில் குறிப்பிட்டு அருளியிருத்தல் காணலாம்.

ஏலேலசிங்கர் என்னும் அன்பர் ஒருவருக்கு, இறைவன் மாணிக்கங்கள் வழங்கி இங்கு அருள் புரிந்ததனுல், மாணிக்கத்தியாகர் என்றும்; உபமன்னிய என்னும் முனிவரிடம் சிவ தீக்கைபெற்று வழிபட்ட வாசுகி என்னும் பாம்பைத் தமது திருவுருவில் சேர்த்தி அமர்த்திக் கொண்டு, அந்த அடையாளங்களுடன் இன்றும் விளங்க வீற்றிருப்பதனுல், படம் பக்கநாதர் என்றும், இங்கு இறைவனுக்குப் பெயர்கள் வழங்குகின்றன. இங்குள்ள இறைவிக்கு வடிவுடையம்மை, வடிவுடைமாணிக்கம் என்பது பெயர்.

இத்தலத்தில், கி.பி. 10-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்திருந்த பட்டினத்தடிகள் பலநாட்கள் தங்கி வழிபட்டுப், பின்னர்ச் சிவயோகத்தில் அமர்ந்து, சிவலிங்க வடிவம் அடைந்து திருவருளிற் கலந்தார். அவர் தம் சமாதிக் கோயில் இன்றும் இங்குச் சிறப்புற விளங்கி வருகின்றது. பட்டினத்தடிகள் இத்தலத்தைக் குறித்து "திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது" என்னும் சிறந்த நூலைப் பாடியருளியுள்ளார். சைவத் திருமுறைகளுள் பதினொன்ரும் திருமுறையில், அந்நூல் சேர்க்கப் பெற்றுள்ளது.

திருவொற்றியூர் கோயில், நான்கு நீண்ட தேரோடும் தெருக்களின் நடுவே, கிழக்கு நோக்கிச் சிறப்பாக அமைந்து திகழ்கின்றது. பழைமை மிக்க, சிறந்த பெரிய கோயில். கோயில் வாயிலைக் கோபுரம் அணி செய்கின்றது. கோபுரத்திற்கு எதிரில் அழகிய பதினுறுகால் மண்டபம் ஒன்று அமைந்திருக்கின்றது. அதற்கு அருகில் வடபகுதியில், கோயிலின் பெரிய திருக்குளம் நன்கினிது அமைந்துள்ளது. வெளிப் பிராகாரத்தின் கொடிமரங்கள் பலிபீடம் முதலியனவும், ஜகந்நாதர் ஜகதாம்பிகை சந்திகளும், மற்றும் பல தெய்வத் திருவுருவங்களும் உள்ளன. மேற்குப் பிராகாரத்தில் அருணசலேசுவரர், சம்புகேசுவரர், காளத்தீசர், சொக்கநாதர் சந்நிதிகள் உள்ளன. வடமேற்கு மூலையில் ஆதிபுரீசுவர் கோயில் உள்ளது. இஃது அண்மையில் திருவொற்றியூரான் அடிமை இராமசாமிப்பிள்ளை என்பவரால், திருப்பணி செய்யப்பெற்றது. அதன் முன் மண்டபத் தூண்கள் பலவற்றில், அழகிய பல தெய்வத் திருவுருவச் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருத்தல், நேரிற் கண்டு மகிழற்பாலது.

இங்குள்ள வட்டப்பாறை அம்மன் சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஆதிசங்கரர் இவ்வம்மையை வழிபட்டதாகக் கூறுவர். இங்குள்ள மகிழ மரத்தின் கீழ்தான், சுந்தரர் சங்கிலியாரை மணந்து கொண்டனர் என்பது வரலாறு. அந்நிகழ்ச்சி மாசிமாதத்தில் நடைபெறும் ஆண்டுப் பெருவிழாவில், ஒன்பதாம் நாள் விழாவில், மகிழடி சேவை எனச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தலத்தின் அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரான கலியநாயனுர் என்பவர், திருவிளக்குத் தொண்டு செய்து இறையருட் பேறு பெற்ருர். கோயிலின் உட்பிராகாரத்தில் தென்கிழக்கு மூலையில், இவர்தம் திருவுருவம் நிறுவப்

பெற்றுள்ளது. ஐயடிகள் காடவர்கோன் (கி பி. 6-ஆம் நூற்.), அருணகிரி நாதர் (கி.பி. 12-ஆம் நூற்.) வடலூர் இராமலிங்க அடிகள் (19-ஆம் நூற்.) முதலிய பற்பல பெருஞ் சான்றோர்கள், இத்தலத்தை வழிபட்டுப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

இக்கோயிலுக்கு பல்லவர், சோழர், பாண்டியர் முதலிய பெருவேந்தர்களும், விசயநகர அரசர்களும் இராட்டிரகூட மன்னர்களும் அவ்வப்போது பற்பல திருப்பணிகள் செய்துள்ளனர். அவ்வரசர்களின் கல்வெட்டுக்கள் பல இக்கோயிலில் ஆங்காங்கே மிகுதியாகக் காணப்படுகின்றன. முதலாம் இராசராசன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் முதலிய பற்பல சோழ அரசர்கள், இக்கோயிலில் மிகுந்த பக்தியும் ஈடுபாடும் கொண்டிருந்தார்கள். இரண்டாம் இராசராசன் ஒருசமயம், "பங்குனி உத்திரத் திருவிழாவிற்கு எழுந்தருளி, 6-ஆம் திருநாளில், மகிழமரத்தின்கீழ் இருந்து ஆளுடைய நம்பிகள் (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) புராணத்தினைக் கேட்டு மகிழ்ந்து வழிபட்டான்" என்று ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

"ஒம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ யுய்யக் கொள்ளாய் ஒற்றியூர் உடைய கோவே"

"மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே"

—அப்பர்.

"பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாம்மாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்றார்; ஐயோநான்
காமாந்த காரம்எனும் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே"

—இராமலிங்கர்.

முடிப்புரை :

இங்ஙனம், இத்தலத்தைப் பற்றிவரும் அழகிய அரிய இனிய பாடல்கள், எத்தனையோ பல உள்ளன. அவைகள் பக்திச் சுவை மிகுந்து, கற்பார் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு, மகிழ்விக்க வல்லனவாகும். பழமையும், பெருமையும், வரலாற்றுச் சிறப்பும், திருவருட் பொலிவும் மிக்க இத்திருக்கோயிலை, அன்பர்கள் அனைவரும் தரிசித்து வழிபட்டு, இறையருள் நலங்கள் பலவும் நிறையப் பெற்று, மகிழ்வார்களாக.

—:o:—

உ

சிவமயம்





சிவ லிங்கம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(4)

சைவசித்தாந்தமார்க்கம் தமிழகத்திலே ஒருபெருஞ் சித்தர் நெறியாயும் ஞானயோக சாதனையாயும் திகழ்ந்தது. இன்றும் அதன் அடையாளம் சிற்சிலர்பால் மின்னுகின்றது. எல்லாவற்றுள்ளும் போலி உள்ளவாறே அதிலும் போலி உண்டு.

'சிவலிங்கம்' மானிடசரீரத்தை யொட்டிய விளக்கமாகச் சொல்லும் திறமும் உண்டு. இது முன் அறிவிக்கப்பட்டது. சிவவாக்கிய தேவர் பாடலும் காட்டப்பட்டது. படினும் அதன் விளக்கம் இதிற் காணலாம்.

மூலாதாரம் என்னும் வெளியினின்று வாசி ஏறிச் சுழுமுனை நாடியுள் இயங்கி முப்பாழ்க்கு அப்பால் முழுப்பாழிற் சார்ந்து முகப்புண்டு முச்சந்தி வந்து கூடும் சின்னஞ்சிறு வாயிலைக் கடந்து அப்பால் செல்லும். அச் செலவாற் சிதம்பரதரிசநம் எனப்படும் உணர்வுவெளிக் காட்சி எய்தலாம். இது பரமுத்திசித்தி, இதற்குரிய அருளொழுக்கையுடைய ராய் நாடொறும் பயிலுதல் முத்திசாதனம் ஆகும். ஆதலாற்ருன், ஞான சித்தர், ஞான சாதகர் என்று இருவகையர் ஆயினர். இத்திறத்தை உணரும் முறைமையும் மெய்ந்நூலிற் கூறப்பட்டது.

ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச்சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினெ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்.
தேசம் இடம் காலம் திக்காசனங்கள் இன்றிச்
செய்வதொன்றுபோல் செய்யாச் செயலதனைச் செய்தங்
கூசல்படும் மனம் இன்றி உலாவல் நிற்றல்
உறக்கம் உணர்வு உண்டிபட்டினி இருத்தல் கிடத்தல்
மாசதனின் தூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்தின் திருத்தத்தின் மைதுனத்தின் சினத்தின்
ஆசையினின் வெறுப்பின் இவை அல்லாதும் எல்லாம்
அடைந்தாலும் ஞானிகள் தாம் அரனடியை அகலார்.

இவ்விரு திருவிருத்தமும் ஞானசித்தராகிய சீவன் முத்தர்க்குக் கரணம் முதலாகிய எவையும் இல்லை என்னும் உண்மையை உணர்த்தியவா றுணர்க. உலாவல் நிற்றல் முதலாகக் கூறப்பட்டவை 'துவந்துவம்'

(இரட்டைமறைப்பண்பு) எனப்படும். பண்பு தனிப்பண்பும் தொழிற் பண்பும் என இருதிறப்படும். 'குணமும் தொழிலுமாகிய பண்பு' (நன்னூல். 300. சங்கரநமச்சிவாயப் புலவர் உரை), என்று கூறிச் சாத்தனது இயல்பு, சாத்தனது நன்மை, எனத் தனிப்பண்பும், சாத்தனது இருக்கை, சாத்தனது நிலே, கபிலரது பாட்டு எனத் தொழிற் பண்பும் உணர்த்தக் காட்டப்பட்டன. இவை அனேத்தும் பண்பு குறித்த தற்கிழமைப் பொருள. 'வேண்டுதல் வேண்டாமையில்லான்' 'இரவு பகல் இல்லா எல்லேயன்' 'மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினர், சோதியுமாய் இருளாயினர் துன்பமுமாய் இன்பம் ஆயினர், பாதியுமாய் முற்றும் ஆயினர், பந்தமும் ஆய் வீடும் ஆயினர், ஆதியும் அந்தமும் ஆயினர்" என ஆக்கக்கிளவி கொடுத்து ஞானசித்தர் திருவுருவில் சிவவழிபாடு செய்தமை காண்க.

என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்புள்ளவற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லே யாண்டானைக் கொண்டன்றே.

என்ற திருவாசகத்துள் 'துவந்துவங்கள்' என்றவை அன்ன பண்பிரட்டைகளேயாம்.

ஞானசித்தர் (சீவன்முத்தர்)க்குக் கரணம் இல்லே. எல்லாக் கரணமும் சிவகரணம் ஆயின. அவர் செய்யாமல், அவரை ஆண்டவன் செய்யுஞ் செயல் ஆதலின், அவர் பால் நிகழும் செயலனேத்தும் 'செய்யாச் செயல்' எனப்படும். திருக்களிற்றுப் படியாரில் (59. 60. 61. 62. பார்க்க) இது தெளியப் பெறலாம். இச் செய்யாச் செயலேச் செய்யும்பொழுது, சீவன் முத்தர் ஏதேனும் செய்தலும் செய்யாமல் விடுத்தலுமாம். இதனே அவ்வுயரிய ஞானசாத்திரத்தில், "ஏதேனும் செய்தல் ஒருவலும் ஆம் செய்யாச் செயலதனைச் செய்யாமற் செய்யும் பொழுது." என்றது காண்க. திருவுந்தியாரிலே, "சித்தமும் தீய கரணமும் சித்திலே யொத்ததே யொத்தது" என்றதும் இந்நிலேயே.

இனி ஞானசாதகர் நிலேயை அறிவோம். சாதகர்க்குக் கரணம் உண்டு. சித்தர்க்குக் கரணம் இல்லே. அதனுல், ஞான சித்தர் பாலர், பித்தர் (உன்மத்தர்) பிசாசர் குணத்தர் எனப் போற்றப் பெற்றனர். கரணுபாவம் உணர்த்தும் அவ்வுவமை மூன்றும் விரித்துணர்ந்து கொள்ளுவர் நல்லறிஞர். ஞானசாதகர்க்குக் கரணமுண்மையால், ஆசிரியர் அருணந்தி தேவநாயனர், ஞானசித்தரது பெருநிலேயை உணர்த்துமாறு காண்க.

"இந்நிலேதான் இல்லேயேல் எல்லாம் ஈச
னிடத்தினினும் ஈசன்எல்லா விடத்தினினும் நின்ற அந்நிலே"

என ஞானசித்தர் நிலேயை அண்மைச் சுட்டால் (இந்நிலேயென்று) அறிவித்தார். சேய்மைச் சுட்டால் (அந்நிலேயென்று) உணர்த்தியது ஞானசாதகர்க்கு வேண்டும் சிவவியாபக (பர) ஞானத்தை. ஈசன் எல்லாவிடத்தினினும் நின்றமை விசுவாந்தரியாமித்துவம். எல்லாம் ஈசனிடத்தினின் நின்றமை விசுவாதிகம். முறையே 'உலகினுக்குயிர்' "உலகினையிறந்து நின்றது அரனுரு" எனப்படும் அவ்விரு நிலேயுமாம். இவ்வறிவை யெய்துதல் அந்தக் கரணங்களே அடக்குதற்குச் சாதனம். பொறிபுலன் கரணமெல்லாம் அடங்கும். அது குருவருளால் அறிவதொரு குறியை அறிதற்குதவும் பெற்றி. அது சிவனே அடைவிக்கும், அவ்வடைவே பசுகரணம் சிவகரணமாகத் துன்னிய சாக்கிர நிலே. அந்நிலேயில் நின்மல துரியாதீதத்தையுற முயல்வதே ஞானசாதகத்தின் முடிவு

நிலை. அம்முடிந்த முடிவான பயனே சிவாநுபவம் சுவாநுபூதிகம் ஆதல். இப்படிச் சாக்கிரத்தே நின்மலதுரியாதீதத்தைப் புரிந்தவர்கள் எல்லாப்பற்றும் அற்றவர்கள். அற்ற அந்நிலையே பெருந்தவம். அத்தவமே அவர்க்குச் செல்வம். அத்தவச் செல்வம் தபோதனம் எனப் படும். அத்தபோதநர்களே பரமாநந்தபாக்கியவான்கள். அவர்கள் இம்மையிலேயே உயிர்ப்பற்று அறுத்துப் பரசிவத்தையடையும்—அடைந்த சிவர்கள். பரசிவனுக்கும் இச் சிவர்களுக்கும் வேறுபாடு என்ன? எங்கும் நிறைந்தமையால் அசைவற்றிருக்கும் சிவம் பரமசிவம். இவர்கள் உடலுள் இருப்பதால் அதனோடு இயங்கும் (நடமாடும் பராவும் சஞ்சரிக்கும்) சிவர். பராவுசிவர் எனப்படுவர். பராவுதல் சஞ்சாரம் புரிதல், இயங்குதல். திருஞானசம்பந்தர் திருவாக்கிலே இப்பெயர் வந்துளது, அதை "நிராமய பராபர புராதன பராவுசிவர் ஆக அருள் என்று இராவும் எதிராயதுபரா நினை புராணன்" (திருமுறை. 3. 67.6) என்றதிற் காண்க. இகலோகத்தே முத்தி பெற்ற நிலை.

இதுகாறும் ஞானசித்தர் ஞானசாதகர் இருதிறத்தர் நிலை விளக்கப் பட்டது. இனிச் சித்தர் நிலையும் சித்தர் நூல் உணர்த்துமாறு காட்டப் படும். இது யோகம் ஆயினும் ஞானயோகச் சார்புடையது.

"சுழுமுனை நடுவே முளைத்தெழுந்து விளங்கி நின்ற ஓங்காரக் கம்பத்துச்சி வெளியில் அகாரம் பீடம் ஆக அமர்ந்த பராபரத்தின் நிலையை அறியவேண்டித் திருச்சிற்றம்பலத்தைக் கண்டு வழிபட முத்தி சித்தியாம்." (தக்ஷிணாமூர்த்தி சுவாமி திருவாய் மலர்ந்தருளிய சுத்த ஞானம் 13-இல் 1. 2. 8. பார்க்க).

விசுவகிராசம் (எல்லாம் விழுங்குதல்) 'யானை முதல் எறும்பு கடையாய் நின்ற எல்லாப் பொருளையும் விழுங்கும் நிலை' எனப்பட்டது. அந்த நிலையிற் சித்தம் சிவமாக்கி நிற்பதே திருச்சிற்றம்பலக் காட்சியுற்றுச் சித்திக்கப் பெற்றநிலை.

ஒன்பது வாயில் உடைய உலகில் உற்றவர் அனைவரும் எட்டு வாயிலைக் காண்பர். ஒரு வாயிலை மட்டும் காணார். அடைத்த வாயில் அது. அதனை அறுத்துக் கடந்து அப்பால் தாண்டி, வன்மைமிக்க மயிர்ப்பாலத்தின் மேலேறி உருகி உலையா உவப்பொடும் திருச்சிற்றம் பலத்தைக் கண்டு வழிபட்டால் முத்தி சித்திக்கும்.

"எட்டெழுத்தாய் இரண்டெழுத்தாய் ஏகம் ஆகி
யியங்கி நிற்கும் பெருமையினை யெவரும் காணார்."

இச் சுத்த ஞானசித்தர் பாட்டினடியை "உண்மை விளக்கம்," எட்டும் இரண்டும் உருவானலிங்கத்தே நட்டம்" என்றதொடு பொருத்தியுண ரின் சிவலிங்கம் புலப்படும்.

ஆருன கோட்டைக்குள் மூலவட்டம்
அதில் நாலு கொத்தளமே; சுவாதிட் டானம்
கூருகக் கோணம் அறு கொத்தளங்கள்
கூறுபிறைக் கோட்டை-கொத் தளமே பத்து
வீருன அநாகதம்கொத் தளமீ ராறு
விசுத்திஅறு கோணம் கொத்தளம் ஈரெட்டுத்
தேருத வட்டஆக் கினைமேல் ஏறிச்
சிதம்பரமும் காணமுத்தி சித்தி ஆமே.

என்னும் பாட்டிலே மூலாதாரம் முதலாய ஆருதாரமும், அதனதன் தாமரையிதழ்த் தொகைவேறுபாடும், பெயரும், வடிவும், ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று மீதானத்தெய்தும் விதியும் பரிபாடை(ச் சொற்) கலந்து நின்று அறிவித்தவாறுணர்க.

'திருவைந்தெழுத்தருள்' சித்தர் நெறியிலும் சைவசித்தாந்த மார்க்கத்திலும் பரமசாதனமாகக் கொள்ளப்பட்டிருத்தலை நல்லோர் உணர்வர். திருமாளிகைத் தேவர் முதலிய சித்தர் பாடலாலும் இஃது உண்மையாதல் தெளியப்படும். மெய்கண்டார் நெறியுடன் அவர்தம் நெறியை இயைத்துக் கொண்டமை திருவிசைப்பாவான் அறிக. 'சித்தர்' என்று எல்லாரும் கொள்ளப்பெறுர். திருமாளிகைத்தேவர், கருவூர்ச் சித்தர் முதலோர் சித்தர். ஏனையோர் போலிச்சித்தர், போலிச்சித்தர் பாடலே அவரது போலியைப் புலப்படுத்திவிடும்.

'திருவைந்தெழுத்தருள்' நிலையுள் (நமபந்தம் மாறுங்காதலார்க்கு ஓதலாம் ஈரெழுத்துமே) இன்றியமையாதன. அவ்வுண்மையை வாசி யோகம்' என்ற வழக்கே நிறுவும்; எமக்கு முதன்முதல் எம் குரு உபதேசித்தது 'வாசியோகம்' ஆகும். ஆதலாற்ருன் எம்மைத் துறவுட் சார்த்தியது அது. 'நம்' என்றுணரவுணர மண்ணுலகப் பற்று மடியும். மம் என்றுணரவுணர நீருலகப்பற்று நீங்கும். 'சிம்' என்றுணரவுணரத் தீயுலகப்பற்றுத் தீரும். 'வம்' என்றுணரவுணர வளியுலகப்பற்று வாடும். 'யம்' என்றுணரவுணர விண்ணுலகப்பற்று விலகும்'. மாயை கோளத்திலே இவை ஐந்தும் ஐந்து மண்டலம் ஆக நிற்றலையறிந்தோர் இவற்றின் பற்று நீங்குமாறறிவர். இவ்வுண்மை மேற்குறித்த சுத்த ஞானப்பாடலுள் எட்டாவது பாடல் தெரித்தது. இது தூலபஞ்சாக்கர லிங்கம். உண்மை விளக்கம் "நாதாந்தத்து அஞ்செழுத்தால் உற்றுரு வாய் நின்ருடல் உள்ளபடி" என்றது. 'நாதாந்தப் பேரொளியைக் காணவேண்டி மூலதளம் முளைத்தெழுந்தவகாரமேலே முட்டி நின்ற கம்பத்தின் முடிவிலேறித் திருச்சிற்றம்பலத்தைக் கண்டு வழிபட முத்தி சித்தியாம்' என்றது.

'மூவெழுத்தும் ஈரெழுத்தும் ஆகி நின்ற மூலம்" என்றது சிவாய, சிவ–வசி (வாசி) என்றவற்றை, அ.உ.ம் என்ற மூவெழுத்தும், விந்து நாதமாகிய ஈரெழுத்தும் எனக் கொள்ளலும் கூடும். அது பிழையாகாது. அது "தேவரோடு மாலயனும் தேடிக்காணுத் திருநடனம்" எனப்பட்டது.

"ஈரெழுத்தும் ஓரெழுத்தாய் ஆகி இயங்கி நிற்கும் அசபை" மூலத் துள்ளே வேரெழுத்தும் வித்தெழுத்தும் இரண்டும் கண்டு வித்திலே முளைத்தெழுந்த சீரெழுத்தை உன்னி நல்லவாசியேறித் தெருவீதி கடந்து ஞானமண்டபத்துள் தாரகத்துக்குள்ளுறை பொருளாம் பரத்தைக் கண்டு சார்ந்து முத்தி சித்திக்கப் பெறலாம்.

'வன்பெரும் பூத யாக்கை மண்டலம் நுணிய காயம்
துன்பம்இல் நகரம் உள்ளே சொலித்திடும் பரகா யந்தான்
அன்பர்கள் போற்றும் தெய்வ ஆலயம் அதனில் வாழும்
என்பெரும் உயிரே யாக்கை எனஉறைந் தருள்வாய் போற்றி.'

குறிப்பு :—பூதயாக்கை-தூலதேகம். நுணிய காயம்-சூக்குமதேகம். பரகாயம்-பரதேகம், காரணசரீரம். தெய்வ ஆலயம்–"காயமே கோயில் ஒங்குடலம் திருக்கோயில், ஊனுடம்பாலயம், உள்ளம்பெருங்கோயில்; வினைபடும் உடல் நீ புகுந்து நின்றமையால் விழுகிய விமானம் ஆயினது, முதலான அருண்மொழிகளை நோக்குக. உயிரே யாக்கை– தீங்கில் உயிர் சிவலிங்கம். சிவன் சீவன், ஞேயம் துலங்கிய ஆவி ஆன்மா நற்றிரு மேனியாகும். மாசிலாஆவி அங்கம், மன்னிடும் உயி ராம் ஈசன், தேகம் தேகிபோல. மாணன் மேனி அங்கம் குருவின்மேனி உயிரே, அங்காங்கியாம்." என்பவற்ருல் சிவலிங்கமும் சிவமும் இனிது விளங்கும். "குற்றம் இல்லாத ஆன்மாவே சிவலிங்கப் பெருமான். ஆன்ம லிங்கத்திற்குப் பிராணன் சிவன்" (ஞானபூசாவிதி. 9. உரை).

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

7. சந்தான குரவர்–அருணூல்களும் அரும்பொருளும் (தொடர்ச்சி)

ஐந்தாம் நூற்பா :

இறைவன் உயிர்களுக்குக் கட்டுநிலையில் செய்யும் உதவி பெரிதாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் தமக்குரிய ஊறு, சுவை, உரு, நாற்றம், ஓசை என்பனவற்றை அறியும்போது உயிராற் செலுத்தப்பட்டே அறியும்; ஆயினும் அவை தம்மை நோக்கியும் அறிவதில்லை; தம்மைச் செலுத்தும் உயிரையும் அறிவதில்லை. அப்பொறிகளைப் போலவே, உயிர்களும் தம்மையும், தம் அறிவிற்கு விளக்கம் தருபவனுய் உள்ள தனிமுதல்வனது திருவருட் சக்தியையும் அறிய மாட்டாதனவாம். உயிர்கள் முதல்வனுல் அறிதல், காந்தத்தின் முன் வைத்த இரும்புபோல, முதல்வன் சந்நிதி மாத்திரையில் நிகழும்; ஆதலால் முதல்வன் சிறிதும் மாற்றம் எய்துவதில்லை.

ஆரும் நூற்பா :

முதல்வன் அறியப்படும் இயல்பினன் என்ருல் உலகப் பொருள்போல நிலையிலாப் பொருள் ஆவன்; அவன் எவ்வாற்ருனும் அறியப்படாதவன் என்ருல் அவன் இல்பொருள் (சூனியம்) ஆவன். ஆதலில் இரண்டு தன்மையும் இன்றி உயிரறிவால் அறியப்படாமையும், மெய்யறிவால் அறியப்படுதலுமாகிய இருவகையானும் இறைவன் சித்தாகிய சத்தாகி உள்ளவன் என்று கூறுவர் மெய்யுணர்ந்தோர்.

ஏழாம் நூற்பா :

சிவத்தின் முன்னர் அசத்தாகிய நிலையிலாப் பொருள் எல்லாம் பாழே ஆதலான் சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அநுபவியாது; பாசம் அறிவில்லாத சடம் ஆதலான் சத்தாகிய சிவத்தை அறிந்து அநுபவியாது. ஆதலால் சத்தேயாகவும் அசத்தேயாகவும் உள்ள உயிர் இரண்டையும் அறிந்து அநுபவிக்கவல்லது ஆதலின் 'சதசத்து' ஆகும்.

எட்டாம் நூற்பா :

முற்பிறவிகளிலே செய்த பெருந்தவத்தினுல் ஒரு பிறவியில் உயிர்க்குயிராகிய பரம்பொருள், உயிர்க்குக் குருவாய்த் தோன்றி உயிரை நோக்கி, "நீ நின் பெருந்தகைமை யறியாமல் இடர்ப்பட்டாய்; நின் பெருந்தகைமை இத்தகையது" என்று அறிவுறுத்துவான். உயிர் ஐம்புல வேடர் கூட்டுறவை விட்டு நீங்கி இறைவனேடு அத்துவிதமாய் நிற்கும் நிலையினை உணர்ந்து அம்முதல்வன் திருவடிகளை அணையும்.

ஒன்பதாம் நூற்பா :

குறைவாகிய அறிவாம் பாசஞானத்தால் அறியப்படாத முதல்வனை அவனுடைய திருவடி ஞானமாகிய கண்ணினுல் அறிவின் கண்ணே ஆய்ந்தறிதல் வேண்டும். ஒருவரும் ஏறிச் செலுத்தாத விரைவுடைய கானல்நீர் ஆகிய பேய்த்தேர் போலப் பாசக் கூட்டம் நீங்கி ஒழிய,

இறைஞானம் பிறவித்துன்பமாகிய வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அக்காட்சி சலியாது இருத்தற்பொருட்டு முத்திபஞ்சாக்கரமாகிய திருவைந்தெழுத்தை முறைப்படி சிந்திக்க வேண்டும்.

பத்தாம் நூற்பா :

பிறப்பு நிலையில் உயிர்களின் பின்னாக அவற்றின் அறிவில் மறைந்து உடனாகி நின்று அவற்றை அறிவித்தும் செய்வித்தும் வருகின்றான். ஆயினும் உயிர்கள் அவ்வுண்மையையறியாது, 'யான்' 'எனது' என்னும் செருக்கோடு முயலுவதனால் முதல்வன் தன்னிருப்பை அவ்வுயிர்களுக்குக் காட்டாமல் நிற்பான். வீட்டு நிலையில் முதல்வனுடைய வியாபகத்தில் அடங்கி ஒன்றாகி நின்று அவன் அருள்வழி நிற்றல் வேண்டும். இங்ஙனம் முதல்வனோடு ஒற்றித்து நிற்றலால் ஆணவமலம், மாயை என்பவற்றோடு கொடிய வினைகளும் உயிர்களைப் பற்றமாட்டா.

பதினோராம் நூற்பா :

காட்டக் காணும் இயல்புடைய கண்ணிற்கு உருவத்தைக் காட்டித் தானும் காண்கின்ற உயிர்போல, உயிர் பொருள்களை அறியும்படி முதல்வன் இயைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலால் அந்த வுதவியை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பினால் முதல்வன் திருவடியாகிய சிவானந்த அநுபவத்தை உயிர் எய்தும்.

பன்னிரண்டாம் நூற்பா :

இன்புறு நிலையாகிய பரமுத்தியைத் தலைப்பட்ட முத்தான்மாக்கள்' திருவருளாற் செலுத்தப்பெற்று, அன்றிப் பழவினை காரணமாகச் சில சமயங்களில் நிட்டை நிலையினின்றும் நீங்கி உலக முகப்படுவர். அப்போது யான், எனது என்னும் செருக்குத் தோன்றாதபடி மும்மல அழுக்கினை ஞான நீராற் கழுவுவர். அந்த ஞானம் நிலைபெறற் பொருட்டு ஒத்த மெய்யன்பரோடு கூடி ஒழுகுவர். அந்த ஞானம் நிலைபெறற் பொருட்டுத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்களையும் திருவேடத்தையும் சிவன் எனவே தெளியக் கண்டு தொழுவர்.

இவ்வாறு சிவஞான போதத்தின் பன்னிரண்டு நூற்பாக்களும் சித்தாந்த சைவக் கருத்துக்களில் முடிமணியாகவுள்ளவற்றை அழகுறத் திட்பநுட்பத்துடன் கூறுகின்றன. இவற்றில் விவாதத்திற்குரிய கூறுபாடுகளை ஆராய்ந்து உணரும்படி, மெய்கண்டார் நூற்பாத்தோறும் கருத்துரையும், மேற்கோள், ஏது அல்லது பொழிப்புரை, எடுத்துக் காட்டுச் செய்யுள் என்னும் இவற்றால் வார்த்திகமும் அருளியுள்ள திறம் போற்றிப் புகழத் தக்கது.

2. சிவஞானசித்தியார் :

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் இதுவே மிகப்பெரிய நூல்; பரபக்கம் சுபக்கம் என்ற இருபகுதிகளை உடையது. அவற்றுள் பரபக்கம் 301 விருத்தப்பாக்கள்; சுபக்கம் 328 விருத்தப்பாக்கள். பரபக்கத்தில் உலகாயதம் முதல் பாஞ்சராத்திரம் ஈறாக உள்ள பதினான்கு சமயக் கொள்கைகள் எடுத்துரைக்கப் பெற்று விரிவாக மறுக்கப்பெற்றிருக்கின்றன. சுபக்கத்தில் சிவஞானபோத நூற்பாக்கள் பன்னிரண்டைப் பின் பற்றிச் சித்தாந்த சைவக் கொள்கைகள் விளக்கப் பெற்றிருக்கின்றன. சிவஞானபோதமே முதனூல் சித்தியார்க்கு என்று துணிந்திட இப்பகுதி முழுதும் துணையாகின்றது.

தருமையாதீன முதற்பெருங்குரவராகிய குருஞானசம்பந்த சுவாமிகள் தம்முடைய சிவபோக சாரத்துள்,

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோதும்"

என்றருளியுள்ள பகுதியும்,

"வள்ளுவர் நூல் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர்புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்றுவரும் பழையபாடல் ஒன்றும், சித்தியாரைத் தண்டமிழின் மேலாந் தரம் என்றும், இதிலுள்ள ஒரு விருத்தப்பாதியே மிக்குச்சிறந்து விளங்கும் என்றும் விளக்கியுள்ளன.

அருணந்தி சிவாசாரியாரின் தெளிந்த நூலறிவும், வடமொழியறிவும், தருக்க நூற் பெரும்புலமையும், மிகுந்த கவித்திறமும் இந்நூலின் விருத்தங்கள் தோறும் ஒளி விட்டுவிளங்கக் காணலாம். இந்நூலின் நடை ஆற்ரேட்டமானது; விருத்தம் அருணந்திசிவனுர் திருவாக்கில் எத்தனை வகையாக வெல்லாம் எழில் பெற்றதென்பது நூலை ஒருமுறை காண்பார் மனத்தும் தெளிவாகக் கூடிய ஒன்று.

தமக்கு முதனூல் தம் ஆசிரியர் மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞானபோதமே என்பதனை,

"என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத் தென்சித்தத்தே
தன்னைவைத் தருளினுலே தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணை மேவிவாழ் மெய்கண்டான் நூல்
சென்னியிற் கொண்டுசைவத் திறத்தினைத் தெரிக்கலுற்ரும்"

என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார் அருணந்திசிவனுர்.

இறைவனுக்கு உருவத் திருமேனி, அருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி உண்டென்று கூறவரும் ஆசிரியர், இவ்வாறு வரும் மூன்று வகைத் திருமேனிகளும் நம் பிறப்பொழிக்க வேண்டி அவன் கொண்ட கருணையின் விளைவே என்பதனை ஓர் அழகொழுகும் விருத்தத்திற் கூறியுள்ளனர்:

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி யதுவும் கண்டோம்! அருவுருவானபோது
திருமேனி உபயம் பெற்ரேம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு காணே."

பெற்ரேர் தம்முடைய புதல்வர்கள் தம் சொல்வழி நில்லாவிடத்து அவர்களை அச்சுறுத்தி வளாரினுல் அடித்துத் தீய விலங்கும் இடுவர். நோக்குவோர்க்கு அச்செயல் இரக்கத்தையே விளைவிக்கும். அஃது அன்பின் அடிப்படையால் நிகழ்வதே. அவ்வாறே முதல்வனது ஒறுத்தற் செயல்களும் அருள் அடிப்படையில் நிகழ்வுறுவன என்று உவமை முகத்தான் விளக்குமிடத்து இலக்கிய அழகு ததும்பிய கவிதை ஒன்றைக் கண்டு மகிழ்கின்ரேம்:

"தந்தைதாய் பெற்றதத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடாவிடின் உறுக்கி வளாரினுல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவே ஆகும்
இந்தநீர் முறைமை யன்ரே ஈசனுர் முனிவும் என்றும்."

“சிவபெருமான் ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருள்வான்; தன் திருவருட் பார்வை நல்கிப் பிறப்பு ஒன்றிலேயே உயிர்களின் மும்மல அழுக்கை நீக்குவான்; ஞானக்கடலின் மூழ்குமாறு செய்வான்; பேரின்பம் பொழிவான்; இனிவரும் எதிர்ப் பிறப்புக்கள் இல்லையாம் படிச் செய்வான்; இவ்வுலகிலேயே வீட்டின்ப நுகர்ச்சி உடையவராகச் செய்வான்; என்றெல்லாம் சித்தாந்த நூல்களிலே பெரியோர் கூறி யிருப்பவும் அதனை உற்றுநோக்கி உறுபயன் கொள்ளவேண்டிய உலக மக்கள் மூர்க்கத் தன்மை உடையவர்களாய், பித்து மிகுதியாகிப் பேசும் பிதற்றுரைகளைக் கூறிப் பாவம் ஆகிய பெருங்குழியில் வீழ்கின்றனரே; இது என்ன மயக்கம்!” என்று ஓரிடத்தே ஆசிரியர் வருந்திப் பாடுகின்ற பகுதி படிக்குந்தோறும் உள்ளத்தை உருக்கிடும் ஒன்ருகும். உலக மாந்தர் நல்வாழ்வின் பொருட்டுக் கண்ணீர் விடுத்து வருந்தும் அரிய சான்ருண்மை உள்ளம் இங்குப் புலனுகின்றது. அந்தத் திருக்கவிதை யின் உணர்ச்சி மயமான வடிவம் இது :

“சித்தாந்தத்தேசிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
சௌனம்ஒன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி.”

சூரியகாந்தக் கல்லினிடத்தே கதிரவனுடைய செவ்வொளி பொருந் தியவுடன் நெருப்பு எழுவது போல, ஆசான் மெய்யுணர்வளித்தற் பொருட்டு உயிர்க்குத் தோன்றியகாலத்தே அவ்வுயிர்க்கு அவன் அறிவுரையைக் கேட்கும் அறிவு விளங்கித் தோன்றும்” என்பார். “பாசி நிறைந்த பொய்கையிற் கல்லினை விட்டெறிந்தால், அதுபட்ட போது நீங்கி, விட்டபோது பரந்து நீரை மூடிக்கொள்ளும்; அதுபோலக் குற்றமுள்ள மும்மலம் யாவும் இறைவனுடைய திருவடியை உணரும் போது நீங்கும்; உணராத போது அணுகும்” என்று விளக்குவார். “இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்ருன்; ஆதலால் அகத்தோ புறத்தோ வழிபட்டால் விறகில் தீப் போன்றும், பாலில் நெய் போன்றும் பழத்திற் சுவை போன்றும், எள்ளில் நெய் போன்றும், முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறி நிற்போர்க்கு அருள் வான்” என்று தெளிவுறுத்துவார். “ஈசனுக்கு அன்பு இல்லாதவர்கள் அடியவர்க்கு அன்பில்லாதவர்; எவ்வுயிர்க்கும் அன்பில்லாதவர்; தமக்கும் அன்பில்லாதவர். பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை;” என்று உணர்ச்சி வயப்பட்டு வன்மையாக இடித்துரைத்தலும் இவர்க் கியல்பே.

இத்தகு அருணலமும் பொருணலமும் பொதிந்த இப்பெரும்பனுவ லில், பரபக்கத்திற்கு உரைகண்டோர் மூவர்; திருவொற்றியூர் ஞானப் பிரகாசர்; தத்துவப் பிரகாசர், வேலப்பர் ஆகியோர். சுபக்கத்திற்கு உரைகண்டோர் அறுவர்; மறைஞானதேசிகர், சிவாக்கிர யோகியார், நிரம்ப அழகிய தேசிகர், ஞானப்பிரகாசர், சிவஞானமுனிவர், சுப்பிரமணிய தேசிகர் என்போர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொன்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலே ஆதீனம்
ஸ்ரீஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய
பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

பாயிரம். விநாயகர் துதி. விருத்தம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானேமுக னேப்பரவி யஞ்சலி செய்கிற்பாம். 1.

இதனுள்:—வானுலகும் மண்ணுலகும் வாழ-விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் வாழ்வடையவும்; மறைவாழ-வேதாகமங்கள் நிலேபெற பெறவும்: பான்மைதரு செய்யதமிழ்-உயிர்க்குறுதியைத் தருகின்ற திருநெறித் தமிழ்வேதம்; பார்மிசை விளங்க-உலகின்கண் விளங்கவும்; ஞானமதவைந்துகர மூன்று விழிநால்வாய்-ஞானமாகிய மதத்தைப் பொழிகின்ற துதிக்கையோடு கூடிய ஐந்து திருக்கரங்களேயும் மூன்று கண்களேயும் நான்றவாயினேயுமுடைய; ஆனேமுகனேப் பரவியஞ்சலி செய்கிற்பாம்-ஆனேமுகக் கடவுளே வாழ்த்திக் கைகூப்புவாம் என்றவாறு.

நால்வாய்-நாலென்னும் எண்ணுப் பொருளவாயும் நின்றது. மும்மதங்களுள்-கைமதம் ஞானமாதலில் ஞானமதம் என்ருரென்க. ஈண்டு விக்கினகருத்தா என்னும் முறைபற்றிப் பொதுமையில் வணங்கப் பட்டது. பின்வரும் வணக்கம் சிவபிரானுக்குப் புத்திரரென்னும் முதன்மைப்பற்றி வணங்கப்பட்டது. இவ்வாறு இருவகை வணக்கம் புராணங்களுள் வருதல் காண்க.

சபாநாதர் துதி

சீராருஞ் சதுமறையுந் தில்லேவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
வேராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி 2

இதனுள்:—சீராருஞ் சதுமறையும்-சிறப்பமைந்த நான்கு வேதங்களும்; தில்லேவாழ்ந்தணரும்-தில்லே மூவாயிரவரும்; பாராரும் புலிமுனியும்-தில்லேப்பதிக்கண்வாழும் வியாக்கிரபாதரும்; பதஞ்சலியுந் தொழுதேத்த-பதஞ்சலி முனிவரும் வணங்கித் துதிக்கவும்; வாராருங் கடல் புடைசூழ்-நீர் நிறைந்த கடலானது அருகிற் சூழ்ந்த; வையமெலா

மீடேற-உலகின்கண்வாழும் உயிர்களெல்லாங்கடைத்தேறவும்; ஏராரு மணிமன்றுள்-திருவருண்ஞானம் நிறைந்துள்ள அழகிய திருவம்பலத் தின்கண்; எடுத்ததிருவடி போற்றி-நடேசப்பிரானது குஞ்சித பாதத்தைத் துதிக்கின்றேன் என்றவாறு.

வையமென்பது-ஈண்டு உயிர்கண் மேனின்றது. போற்றியென்னுந் தொழிற்பெயர் ஈண்டு முற்ருய் நின்றது. போற்றியென்றது துதித்தலே.

சிவகாமசுந்தரி துதி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. 3

இதனுள் :—பரந்தெழுந்த-உலகமுழுதும் பரவியெழுந்த; சமண்முதலாம் பரசமயவிருணீங்க-அருகம் முதலான புறச்சமயங்களாகிய அந்தகாரம் நீங்கவும்; சிரந்தழுவு சைவநெறி-எவ்வகை மதங்கட்குந் தலைமையா யுள்ள சைவநெறிக்குரிய; திருநீற்றினொளி விளங்க-திருநீற்றினொளி யெங்கும் பெருகவும்; அரந்தைகெட-உயிர்களது பிறவித்துன்ப மொழிய வும்; புகலியர்கோனமுதுசெய-சீகாழியிலவதரித்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் அமுது செய்யும் படிக்கு; திருமுலைப்பால் சுரந்தளித்த-திருமுலைப்பாலைச் சுரந்து கொடுத்தருளிய; சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி-சிவகாமியம்மையின் அழகுள்ள திருவடிகளை வணங்குவாம். என்றவாறு.

கற்பகவிநாயகர் துதி

மலரயனுந் திருமாலுங் காணமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயி
னிலவியகற் பகக்கன்றி னிரைமலர்த்தா ளிணைபோற்றி. 4

இதனுள் :-மலரயனுந் திருமாலுங் காணமை மதிமயங்க-தாமரை மலரின் கண்வாழும் பிரமனுந் திருமாலும் முடியையும் அடியையும் காணமை யினல் அறிவு மயங்கவும்; புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழ-வியாக்கிரபாதரும் பதஞ்சலி முனிவரும் தரிசித்து வணங்கவும்; புரிசடையார்-முறுக்கப்பட்ட சடைமுடியையுடைய நடேசப்பிரான்; குலவு நடந்தரும்-ஐந்தொழிலும் விளங்குதற்கேதுவாகிய திருநடனஞ் செய்யும்; தில்லைக்குடதிசைக் கோபுரவாயினிலவிய- தில்லையின் மேற்குக் கோபுர வாயிலில் விளங்காநின்ற; கற்பகக் கன்றினிரை மலர்த்தாளிணை போற்றி-கற்பகவிநாயகருடைய வரிசையாக வைத்த இரண்டு செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைத் துதி செய்வாம் என்றவாறு.

சுப்பிரமணிசுவாமி துதி

பாறுமுக மும்பொருந்தப் பருந்துவிருந் துணக்கழுகு
நூறுமுக மாயணைந்து நூழில்படு களம்புகுத
மாறுமுகந் தருநிருதர் மடியவடி வேலெடுத்த
ஆறுமுகன் திருவடித்தா மரையிணைக ளவைபோற்றி. 5

இதனுள் :--பாறுமுகமும் பொருந்த-பகைவர் முதுகுகாட்டி யோடுதல் பொருந்தவும்; பருந்து விருந்துண-பருந்துகள் விருந்துண்ணவும்; கழுகு நூறுமுகமாயணைந்து-கழுகுகள் அநேக இடங்களினின்றும் வந்து; நூழில் படுகளம்புகுத-கொல்லப்பட்ட யுத்தகளத்திற் சேரவும்; மாறுமுகந்தருநிருதர்மடிய-மாறுபட்ட முகங்களையுடைய அவுணர் களிறக்கும்படி; வடிவேலெடுத்த ஆறுமுகன்-வேலினையெடுத்தருளிய சுப்பிரமணியக் கடவுள்; திருவடித் தாமரையிணைகளவை போற்றி-திருவடித் தாமரைகளை வணங்குவாம் என்றவாறு.

உம்-அசை. நூழில் என்பதற்குச் சேறுபட்ட எனினும் அமையும். அவை-பகுதிப் பொருள் விகுதி.

சைவசமயாசாரியார் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி 6

இதனுள்:—பூழியர்கோன் வெப்பொழித்த-கூன்பாண்டியன் சுரத்தைத் தணித்த; புகலியர்கோன் கழல்போற்றி-சம்பந்தசுவாமிகளுடைய திருவடிகளைப் போற்றி செய்வாம்; ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்த-சமுத்திரத்திற் கருங்கல்லாகிய தெப்பத்தின் மீது வந்த; பிரானடி போற்றி-அப்பர் சுவாமிகளுடைய திருவடிகளைப் போற்றி செய்வாம்; திருநாவலூர் வன்றொண்டர்-திருநாவலூரில் திருவவதாரஞ் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய; பதம் போற்றி-திருவடிகளைப் போற்றி செய்வாம்; ஊழிமலி திருவாதவூரர்- ஊழிக் காலத்திலும் அழியாத திருவாதவூரரென்னும் மாணிக்கவாசக சுவாமிகளுடைய; திருத்தாள் போற்றி-திருவடிகளைப் போற்றி செய்வாம் என்றவாறு.
வாழி-அசை.

திருத்தொண்டர்-சேக்கிழார் நாயனர் துதி

தில்லைவா"ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்
[போற்றி
யொல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி. 7

இதனுள்:-சீர்படைத்த தொல்லையதாம்-சிறப்புத் தங்கிய பழைமையாகிய; திருத்தொண்டத் தொகை-திருத்தொண்டத் தொகையிற் கூறிய; தில்லைவாழந்தணர் முதலாக அடியார்-தில்லைவாழந்தணர்கள் முதலாகிய அடியார்கள்; பதம்போற்றி-திருவடிகளைத் துதி செய்வாம்; ஒல்லையவர் புராணகதை-ஆதியில் அந்த அடியார்கள் புராணத்தை; உலகறிய விரித்துரைத்த-உலகத்தார் தெரிந்து கொள்ளும்படி விரிவாகக் கூறியருளிய; செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார்-செல்வம் நிறைந்த குன்றத்தூரில் திருவவதாரஞ் செய்த சேக்கிழார் நாயனுருடைய; அடி போற்றி-திருவடிகளைப் போற்றி செய்வாம் என்றவாறு. ஏ-அசை.

நூற்பெயர்

தாய்மலர்ந்த முகத்தினளாய்த் தழுவிமுலை தரவந்த
நோய்மலர்ந்த பிறவிதொறு நுழையாம லுலகுய்யத்
தீமலர்ந்த சடைக்கூத்தர் திருவருளாற் சேக்கிழார்
வாய்மலர்ந்த புராணத்தின் வரலாறு விரித்துரைப்பாம். 8

இதனுள்:—தாய் மலர்ந்த முகத்தினளாய்த் தழுவி-தாயானவள் மகிழ்ச்சியான் மலர்ந்த முகத்தை யுடையவளாகித் தன்மார்போடணைத்துக் கொண்டு; முலைதரவந்த நோய் மலர்ந்த பிறவிதொறு நுழையாமல்-முலைப்பால் கொடுத்தற் கேதுவாய் வந்த, துயர்மிக்க பிறவிகளிற் செல்லாமல்; உலகுய்ய-உலகத்தார் பிழைத்துக் கடைத்தேறும் பொருட்டு; தீ மலர்ந்த சடைக்கூத்தர் திருவருளால்-நெருப்புப்போல் பிரகாசியா நின்ற சடாபாரத்தையுடைய நடேசப்பிரான் திருவருளினுல்; சேக்கிழார் வாய்மலர்ந்த புராணத்தின் வரலாறு-சேக்கிழார் நாயனுர் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண வரலாற்றை விரித்துரைப்பாம்-விரிவாகக் கூறுவாம் என்றவாறு.

வரலாறு என்றதனுல் ஆக்கியோன் சிறப்பும் நூல் வந்த வழியும் அதை அரங்கேற்றும் முறையும் முதலியன கொள்க. வரலாறு என்றது சிறப்புப் பாயிரத்தை.

அவையடக்கம்

ஊர்க்கடலை யிவனெனவந் துதித்தநா ஞேங்குதமிழ்,
நூற்கடலைக் கரைகண்டு நுவலநினைக் குமது திருப்
பாற்கடலைச் சிற்றெறும்பு பருகநினைப் பதுபோலு
நீர்க்கடல்சூழ் மண்ணுலகை நிறுக்கநினைக் குமதொக்கும். 9

இதனுள்:-ஊர்க்கடலை யிவனென வந்துதித்த நான்-இவன் இவ்வுலகத்திற்குச் சாம்பற் புழுதியென்று சொல்லும்படி பிறந்த நான்; ஓங்கு தமிழ் நூற்கடலைக் கரைகண்டு நுவல நினைக்குமது-மிகுந்த சிறப்போடு விளங்குகின்ற பெரியபுராணம் என்னும் சமுத்திரத்தின் அளவைக் கண்டு கூறத்தொடங்குவது (எவ்வாறெனில்); திருப்பாற்கடலைச் சிற்றெறும்பு பருக நினைப்பது-திருப்பாற்கடலைச் சிற்றெறும்பானது உண்ண நினைப்பதையும்; நீர்க்கடல் சூழ் மண்ணுலகை-நீர் நிறைந்த சமுத்திரஞ் சூழ்ந்த இப்பூமியை; நிறுக்க நினைக்குமதொக்கும்-நிறுப்பதற்கு நினைப்பதையும் ஒப்பாகும் என்றவாறு.

போலும்-அசை. ஈண்டுத் தமிழ் நூலென்றது பெரியபுராணத்தை.

தேவுடனே கூடியசொற் செந்தமிழோர் தெரிந்துரைத்த
பாவுடனே கூடியவென் பருப்பொருளும் விழுப்பொருளாங்
கோவுடனே கூடிவருங் குருட்டாவு மூர்புகுதும்
பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால். 10

இதனுள் :—கோவுடனே கூடிவரும்-பசுக்களுடனே கூடிக்கொண்டு வருகின்ற; குருட்டாவு மூர்புகுதும்-குருட்டுப் பசுவும் ஊரிற்செல்லும்; பூவுடனே கூடிய நார்-மலரோடு சேர்ந்த நாரும்; புனிதர் முடிக்கணியாம்-சிவபிரான் திருமுடிக்கு மாலையாகும் (அதுபோல); தேவுடனே கூடிய சொல்-தெய்வத்தன்மை பொருந்திய சொல்லமைந்த; செழுந்தமிழோர் தெரிந்துரைத்த-செழுமையாகிய தமிழையுடைய சேக்கிழார் நாயனுர் நன்ருக வாராய்ந்து அருளிச் செய்த; பாவுடனே கூடிய- திருத்தொண்டர் புராணத்தோடு கூடிய; என்பருப் பொருளும் விழுப்பொருளாம்-என்னுடைய அற்பமாகிய பொருளும் மேன்மையாகிய பொருளாகும் என்றவாறு. ஆல்-அசை.

பாயிரம் முற்றிற்று

திருவுருவ உண்மை உணர்த்

"காமனைக் காய்ந்த கண்ணுதல்"

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

முன்னுரை :

"காமன்எரிப் பிழம்பாக நோக்கிக்
காம்பன தோளியொடும் கலந்து
பூமரு நான்முகன் போல்வர் ஏத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே"

—சம்பந்தர்.

சிவமெருமான் 'பலபல வேடமாகும் பரன்' எனவும், 'நானாவித உருவாய் நமை ஆள்வான்' எனவும், தேவார ஆசிரியர்களால் போற்றப் பெற்றுள்ளார். அதன்படி, அருட்பெருங் கடலாகிய சிவபெருமான், அவ்வப்போது மேற்கொண்டருளிய திருவுருவங்கள் பலப்பலவாகும். அத்தகைய திருவுருவங்கள் பலவற்றுள் 'காமதகனமூர்த்தம்' என்பதும் ஒன்றாகும். சிவபெருமான் செய்தருளியனவாகச் சமயதத்துவ நூல்கள் கூறும் வீரச் செயல்கள் எட்டு. அவைகளுள் காமதகனம் புரிந்த செயலும், சிறப்பானதொன்றாகும். சிவபெருமான் திருக்குறுக்கை என்னும் சிவதலத்தில், காமதகனம் செய்தருளினார் எனப் பெரியோர்கள் கூறுவர்.

வரலாறு :

சிவபெருமான் தக்கன் வேள்வி தகர்த்தருளிய பின்னர், இறைவியுடன் திருக்கயிலையில் எழுந்தருளி வீற்றிருந்தார். அப்போது இறைவி இறைவனைத் தொழுது, "யான் முன்பு தக்கனுக்கு மகளாகப் பிறந்து, தாட்சாயணி என்னும் பெயர் பெற்றிருந்தேன். தங்களை இகழ்ந்து தீங்குற்ற அக்கொடியவனின் தொடர்புடைய, என் பெயரையும் உடலையும் இனி யான் விரும்புகின்றிலேன். இவைகள் நீங்குமாறு எனக்கு அருள் புரிதல் வேண்டும்" என வேண்டிக் கொண்டாள். அது கேட்ட சிவபெருமான், "இமவான் என்னும் மலையரசன், உன்னை மகளாகப் பெற விரும்பித் தவம் புரிகின்றான். அவனுக்கு நீ மகளாகச் சென்று அவனது வேண்டுகோளை நிறைவேற்றி அருள்க" என்று பணித்தருளினர்.

அதன்படியே அம்பிகை மலையரசன் காணும்படி, ஒரு பொய்கையில் தாமரை மலரில் ஒரு சிறு மழ இளங்குழவியாகத் தோன்றியருளினாள். அழகிய அம்மழவிளம்பெண்குழந்தையைக் கண்ட மலையரசன் மகிழ்ந்து எடுத்துச் சென்று, தன் மனைவி மேனையிடம் கொடுத்து, அக்குழந்தையை பொன்னினும் மணியினும் போற்றி, மிகுந்த அன்புடன் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தான். அதனால் அம்பிகைக்கு மலைமகள் எனவும், பார்வதி எனவும் பெயர்கள் அமைந்தன. ஐந்து வயது நிரம்பியதும், அக்குழந்தை சிவபெருமானை மணக்கவிரும்பி, தாய் தந்தையர் ஆகிய மேனையும் இமவானும் பலவாறு தடுத்தும் கேளாமல், இமயமலையிற் கடும் தவம் புரிய முற்பட்டனள். வேறு வழியின்றி மலையரசன், தன் மகள் தவம் புரிதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்தளித்தான்.

இந்நிலையில், சிவபெருமான் அம்பிகையைப் பிரிந்து தனித்திருந்தார். அப்போது சனகர் சனந்தனர் சனாதனர் சனக்குமாரர் என்னும் முனிவர்கள் நால்வரும், இறைவனைச் சென்று திருக்கயிலையிற் கண்டனர். "வேதங்கள் தம்முள் மாறுபட்டு வெவ்வேறு பொருள்களை உணர்த்துகின்றன. அதனால் நாங்கள் உண்மைப் பொருள் யாதென்று தெளிய முடியாமல் மயங்கிக் கலங்கி மறுகுகின்றோம். எங்கள் ஐயங்கள் தீர்ந்து, யாங்கள் மெய்யுணர்வு பெறும் வண்ணம், எங்களுக்கு ஞான உபதேசம் புரிதல் வேண்டும்" என்று சிவபெருமானைப் பணிந்து வேண்டிக் கொண்டனர். அப்போது சிவபெருமான், ஞானம் என்பது நூலினும் சொல்லிலும் அடங்குவதன்று, என்று கூறித் தம் வலக் கையை மார்பின்கண் வைத்துச் சுட்டு விரலைக் கட்டைவிரலின் அடியிற் சார்த்தி, ஏனைய மூன்று விரல்களை ஒருங்கே நிறுத்தி, மோன (சின்) முத்திரை காட்டி, ஒருகணப்போது, செயல் ஒன்றுமின்றி யோக பாவனையில், தட்சிணாமூர்த்தம் என்னும் நிலையில், வீற்றிருந்தார்.

சிவபெருமானுக்குரிய ஒரு கணநேரம், ஏனைய உயிர்களுக்கெல்லாம் எத்தனையோ பல ஊழிகளாக நீண்டு நின்றது. இறைவன் இறைவியைப் பிரிந்து யோகநிலையில், தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருந்ததனால், உயிர்களெல்லாம் போக நுகர்ச்சியற்றுச் செயலிழந்து கிடந்தன. நெற்பயிர்கள் வளரத் தொடங்கும்போது, நீர்வற்றிப்போக வாடி வதங்கிக் கதிர்கள் தோற்ற இயலாமல் சாய்வு அடைந்து அழிதல் போல, உயிர்களெல்லாம் புணர்ச்சியும் போகமும் அற்றுச் செயலிழந்து வருந்தத் தலைப்பட்டன.

இந்நிலையில், சூரபதுமனால் பெரும் கொடுந்துன்பங்கள் அடைந்த தேவர்களும் முனிவர்களும், சூரபதுமனிடமிருந்து தம்மைக் காத்தருளும் படி சிவபெருமானிடம் சென்று வேண்டிக் கொண்டனர். அப்போது சிவபெருமான், "எம்மிடமிருந்து எம்மைப்போல் ஒரு மைந்தன் தோன்றுவான். அவன் சூரபதுமனைத் தடிந்து, உங்கள் துயரங்களைப் போக்கிக் காத்தருள்வான்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி சிவபெருமானிடமிருந்து அவருக்கு நிகரான ஒரு புதல்வன் தோன்றுதலைத், தேவர்களும் முனிவர்களும் மிக்க பேரார்வத்துடன் விரும்பி எதிர் நோக்கிக் காத்திருந்தார்கள். சிவபிரான் ஒருகண நேரம் யோக நிலையில் அமர்ந்து இருந்தது, அவர்களுக்குப் பல ஊழிகளாகத் தோன்றின அதனால் அவர்கள் பெரிதும் துன்பமுற்றார்கள்.

செய்வகை யறியாது திகைத்த தேவர்கள், பிரமனிடம் சென்று முறையிட்டனர். பிரமன் காமதேவனை அழைத்து, நீ திருக்கயிலைக்குச் சென்று, யோக நிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது, நின் மலரம்புகளை ஏவி மயக்கி, அவருக்கு எங்ஙனமேனும் காம உணர்ச்சி எய்துமாறு தூண்டி வருக" எனப் பணித்தார்; அதுகேட்ட காமதேவன்,

"கையும், நகையும், கதிரார் விழியும்,
மெய்யும் தழலாம் விமலன் தனையான்
எய்யும் படிசென் றிடின், இவ் வுயிர்கொண்டு
உய்யும் திறமும் உளதோ? உரையாய்"

எனப் பலகூறி மறுத்தான். அதற்குப் பிரமன் முனிந்து, "நீ என் கட்டளையை மறுத்தால், நின்னைச் சபிப்பேன்" என அச்சுறுத்தினன். காமன், 'பிரமனின் சாபமுற்று வருந்துதலினும், சிவபிரான் மீது மலர்க் கணை ஏவி மாளுதலே நலம் பயக்கும்' என ஒருவாறு துணிந்தான். கிளியைக் குதிரையாகக் கொண்டு, தென்றல் தேர் ஏறிக், கரும்பு வில் ஏந்தி, மீனக்கொடி பிடித்து, மதிக்குடை நிழற்ற, குயிலும் கடலும் காகளமும் முரசு ஆர்ப்பத், தன் துணைவியாகிய இரதி தேவியுடன், காமதேவன் திருக்கயிலை நோக்கிப் புறப்பட்டான்.

புலியைத் துயில் எழுப்பும் எளிய மான்போல, காமதேவன் அச்சமும் நடுக்கமும் கொண்டு, சிவபிரான் திருமுன் சென்று, தன் மலர்க்கணைகளை ஏவினன். சிவபிரான் தனது நெற்றிக்கண் திறந்து, சிறிதே காமனை உற்று நோக்கினர். அவ்வளவில் காமதேவன் எரிந்து கரிந்து பொடியாய் வீழ்ந்து இறந்தான். தன் கணவன் இறந்தது கண்ட இரதிதேவி, பெரிதும் துடித்து அலறிக் கதறி வருந்திப் புலம்பினள். இறைவன் அவள்பால் இரக்கம் கொண்டு அருள்புரிந்தான். அதன்படி, இறைவன் இறைவியைத் திருக்கயிலையில் திருமணம் புணர்ந்த ஞான்று, காமதேவன் அனங்கன் (உருவமற்றவன்) என்னும் நிலையில், இரதிதேவி மகிழும்படி உயிர்பெற்று எழுந்து, இறையருளைப் பெற்றான் என்பது, காமதகனம் பற்றிய வரலாறு.

தத்துவ நுண் பொருள்:

காமதகனம் நிகழ்த்திய பின்னரே, சிவபெருமான் பார்வதி தேவியைத் திருமணம் புணர்ந்தார். அதன் பின்னரே குமாரசம்பவம் (முருகனின் தோற்றம்) நிகழ்ந்தது என்பது கந்தபுராணம். இது வெறும் கதை போலத் தோன்றினும், இதன்கண் ஆழ்ந்த தத்துவ நுண்பொருள்கள் பல பொதிந்து உள்ளன. கருத்தை விளக்கவே கதை வந்தது. கதை உடல், கருத்து உயிர். இறைவனும் இறைவியும் பிரிந்திருந்த நிலையில் உலகுயிர்கள் செயலிழந்து கிடந்தன என்பது, 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் உண்மையைத் தெளிவிக்கின்றது. இறைவி மலைமகளாகத் தவம் புரிந்தாள். இறைவன் தட்சிணாமூர்த்தியாய் யோக நிலை மேற்கொண்டான். ஒரு சிறந்த கணவனை அடையப் பெண்மகளும் ஒரு சிறந்த மனைவியை அடைய ஆண்மகனும், முறைப்படி அருந்தவம் புரிதல்வேண்டும். கணவனுக்குத் தகுந்த மனைவி வாய்ப்பதும், மனைவிக்குத் தகுந்த கணவன் வாய்ப்பதும், தவத்தினாலேயே அமையும் என்பது இதன் நுண்பொருள்.

தம்தம் தவத்தின் பயனாகக் கணவனும் மனைவியுமாகிய இருவர் கூடி நின்ற வழியும், அவர்கள் காமவயப்பட்டு வெறும் விலங்குணர்ச்சிகளினால் தம்மிற்கூடி, மக்களைப் பெற்றெடுத்தல் ஆகாது. புலன்களை அடக்கி வெற்றிகொண்டு, கீழ்த்தரமான காம உணர்ச்சிகளைச் சுட்டெரித்து, ஆன்மீக வாழ்வில் தம்மை மேன்மேல் உயர்த்திக் கொள்ளும் சிறந்த தவவொழுக்கத்தின் பயனாகவே, மக்கட்பேறு எய்துதல் வேண்டும். அந்நிலையில் பெறும் மக்களே, தந்தையினும் சிறந்த மைந்தராய், உலகுக்கு நலம் விளைக்கும் தன்மையில் சிறந்து விளங்குவர்.

பிள்ளைகளைச் சையோகத்தால் (உடற்சேர்க்கையால்) பெறுவதிலும், தவயோகத்தால் பெறுதலே முறையாகும். சிவபாத இருதயரும் பகவதியாரும் இங்ஙனமே திருஞானசம்பந்தரை மைந்தராகப் பெருந்தவம் கிடந்து பெற்றனர் என்பது எண்ணியுணர்தற்குரியது.

“மனையறத்தில் இன்பமுறும் மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீருக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார்”

என்பது பெரியபுராணம். காந்தியடிகள் தம் மூத்த புதல்வனின் விரும்பத்தகாத செயல்களுக்கும் குணங்களுக்கும், தம்முடைய பண்பாடு எய்தாத இளமைக் காலத்து முறைகேடான வாழ்க்கையே காரணமாகும் என்று குறிப்பிட்டிருத்தலும் இங்கு நாம் சிந்தித்துணரத் தகுவதாகும்.*

இச்சிறந்த அரும்பெறல் உண்மையையே, காமதகனம் நடைபெற்ற பின்னர் நிகழ்ந்த குமாரசம்பவ நிகழ்ச்சி, நமக்குத் தெள்ளிதின் உணர்த்துகின்றது. மனிதன் தன் உயிராற்றலை (விந்துவை)க் கீழ் நோக்கிச் செலுத்தாமல், உயர்ந்த குறிக்கோள்களுக்காக, மேலான நிலையில் பயன்படுத்துதல் வேண்டும். சிவபெருமான் புலன்களை அடக்கி வென்ற அருந்தவப் பெருந்தகையாகத் திகழ்ந்தார். அவரது ஆற்றல் (ஊர்த்துவ ரேதஸ்), மேல்நோக்கிச் சென்று நெற்றிக்கண் தவக்கனலாகத் தீப்பொறியாக வெளிப்போந்தது. ஐந்து முகங்களையுடைய சிவபெருமானுக்கு ஆறு முகங்களையுடைய முருகப் பெருமான் தோன்றினான். “தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது” என்றபடி, முருகப்பெருமான் உயிர்களுக்கெல்லாம் நலம் செய்யும் கருணைப் பெருங்கடலாகக், கலியுகத்திற் கண்கண்ட தெய்வமாக விளங்கி வருகின்றான்.

உலகத்தில் ஒவ்வொரு தாயும் பார்வதி தேவியைப் போலவும், ஒவ்வொரு தந்தையும் மங்கையோடு இருந்தே யோகுசெய்யும் சிவபெருமானைப் போலவும் ஒவ்வொரு மைந்தனும் அறிவாற்றல்களில் சிறந்து

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

---

* “I have always felt that the undesirable traits I see to day in my eldest son are an echo of my own undisciplined and unformulated early life. I regard that time as a period of half-baked knowledged and indulgence. It coincided with the most impressionable years of my eldest son......”

—M. K. Gandhiji,
My Experiments with Truth.

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(6)

கூரத்தாழ்வானும், முதலியாண்டானும் இராமாநுசரைச் சரணடைதல்

இவ்விதம் கோவிந்தரைத் தம்மிடம் அழைத்து வருமாறு தம்முடைய மாமாவான பெரிய திருமலைநம்பிக்கு ஓலையனுப்பிய இராமாநுசர், தம்முடைய மருமகரான முதலியாண்டானையும் காண விருப்பங்கொண்டார். முதலியாண்டானுக்கு தாசரதி என்ற வேறு பெயரும் உண்டு. முதலியாண்டான் நற்குடிப்பிறப்பும், நற்கல்வியும், நற்செல்வமும் வாய்க்கப் பெற்றவர். இராமாநுசர் துறவு பூண்ட செய்தியை அறிந்த முதலியாண்டானும், உடனே இராமாநுசரைக் கண்டு வணங்கித் தொண்டு செய்ய விரும்பினார். இராமாநுசரும் முதலியாண்டானைக் காண விரும்பினார். இங்ஙனம் இருவருடைய விருப்பமும் நிறைவேறும் வகையில் இறைவன் அருள் புரிந்தார், அதே நேரத்தில் காஞ்சிபுரத்திற்கு அண்மையிலுள்ள கூரம் என்னும் கிராமத்தில் திருமறுமார்பன் என்னும் பெயரையுடைய கூரத்தாழ்வானும் வாழ்ந்து வந்தார். இராமாநுசருக்குச் சம வயதினரான இவர் சாத்திரக் கடலைக் கடந்தவர். பேரறிஞராக விளங்கியவர். அளவற்ற செல்வமும் இவருக்கு உண்டு. அறவழியிலீட்டிய பொருளை எல்லாருக்கும் வழங்கி வள்ளலாகவும் திகழ்ந்தவர். இத்தகைய பேறு பெற்ற கூரேசர், இராமாநுசர் துறவு பூண்டு காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருப்பதைக் கேள்விப்பட்டுத் தாமும் அவரைச் சரணடைந்து மேலும் உய்யும் வழிக்கு உகந்த நூல்களைக் கற்க விரும்பினார். மெல்ல மெல்ல இல்லற பாசங்களை விலக்கிக் கொண்டார். திடீரென்று ஒருநாள் தம்முடைய செல்வங்களையெல்லாம் வறியவர்களுக்கு வாரி வழங்கி விட்டுத் தம்முடைய மனைவிக்கு வேண்டிய செல்வத்தையும் கொடுத்து விட்டுக் காஞ்சிபுரம் புறப்பட்டார்.

கூரத்திலிருந்து காஞ்சிக்குப் புறப்பட்ட கூரத்தாழ்வான் மாலை வேளையில் காட்டுவழியே நடந்து வந்து கொண்டிருந்தார். கணவரைப் பிரிந்து தனியே வாழமனமின்மையால், அவருடைய மனைவியான ஆண்டாளம்மையும் சிறிது தொலைவிற்குப் பின் தொடர்ந்து வந்தார். இதையறிந்த கூரேசரும் வியப்புற்றார். தம்மைப்பிரிந்து வாழ மனமின்றித் தொடரும் மனைவியின் பெருங்குணத்தைப் பாராட்டி அவ்வம்மையாரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். இடைவழியில் இருட்டில் செல்லும்போது தம்கணவரிடம் பயமாக இருக்கிறதே என்று கூறினாள். அதற்கு அவள் கணவரான கூரேசர், "மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயப்பட வேண்டும்; ஏதேனும் பொருள் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று கேட்டார். அவ்வம்மையாரும், "சுவாமி

தாங்கள் உண்பதற்குப் பயன்படுத்தும் பொன் வட்டிலை மட்டும் எடுத்து வந்துள்ளேன்" என்று கூறினாள். உடனே கூரேசர் அந்தப் பொன் வட்டிலை வாங்கி வெகு தூரத்தில் விழும்படி எறிந்து விட்டார். "இனி உனக்குப் பயமிருக்காது, வேகமாக நட" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டார். இவ்விதம் செல்வத்தில் திளைத்த கூரேசருக்குப் பற்றற்ற வைராக்கிய நிலை இராமாநுசரைச் சரணடைவதற்கு முன்பே வந்து விட்டது. இரவெல்லாம் நடந்து காஞ்சிபுரத்தையடைந்த கூரத்துத் தம்பதிகள் பொழுது விடிந்தவாறே அனந்தபுட்கரணியில் நீராடித் திருமண்காப்பணிந்து கொண்டு, பேரருளாளரையும், பெருந்தேவியை யும் வணங்கக் கோயிலுக்குச் சென்றனர்.

இராமாநுசரும் முன்பே தம்மைச் சரணடைந்த கந்தாடை முதலி யாண்டானுடனும், வேறுபல சீடருடனும் கோயிலுக்கு எழுந்தருளி யிருந்தார். அங்குக் கூரத்தாழ்வானையும் அவர் மனைவியையும் கண்டு அவர்களைத் தம்முடைய மடத்திற்கு அழைத்து வந்தார். கூரத்தாழ் வானும் தம்முடைய மனைவியோடு இராமாநுசரைச் சரணடைந்து அங்கேயே தங்கி, அரும்பொருள்களையெல்லாம் கேட்டு மகிழ்ந்திருந்தார். இராமாநுசரும் கூரத்தாழ்வானின் பெரும்புலமையையும், புனிதத் தன்மையையும் கண்டு பெருமகிழ்வெய்தினர். ஆளவந்தாருடைய அருளால் அறிவிலும், ஆற்றலிலும், அனுட்டானத்திலும் சிறந்த இரண்டு சீடர்கள் கிடைத்துவிட்டார்களே என்று இறையருளைப் போற்றினர். இந்த இரட்டையரான கூரத்தாழ்வான், முதலியாண்டான் ஆகியவர்களோடு காளத்தியிலிருந்து நம் கோவிந்தனும் வந்து விட்டால் மூன்று பேராகி விடுவார்கள். இம்மூவரையும் கொண்டு மூன்று உலகங்களையுமே வென்றுவிடலாம்; இனி வைணவத் திரு தழைத் தோங்கும் என்று பூரிப்புடன் இருந்தார். இந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக முன்பு தமக்குக் குருவாக விருந்த யாதவப்பிரகாசரும் வந்து இராமாநுசருடைய சீடர் குழாத்திலே சேர்ந்து விட்டார். முன்பெல் லாம் வேத, உபநிடதங்களுக்குத் தாம் வலிந்து பொருள் கூறிய முறைகள் சரியில்லையென்று தமக்குத் தோன்றியதாலும், இராமா நுசருடைய நுட்பமான அறிவால் விளங்கிய பொருள்களே உண்மை யான பொருள்கள் என்று தாம் உணர்ந்ததாலும் தாம் இராமாநுச முனியை அடைந்ததாகக் கூறினர். இராமாநுசரும் தமக்கு முன்பு அவர் குருவாக விளங்கியதால், அவரிடம் மிகவும் அன்பாகப் பழகி வரலானர். இவ்விதம் யாதவப்பிரகாசரே வந்து சரணடையும் வகையில் இராமா நுசருடைய கொள்கைகள் வலிவோடும், பொலிவோடும் அக்காலத்தில் பூத்துக் குலுங்கின. இவ்விதம் யாதவப்பிரகாசர் இராமாநுசரைச் சரணடைதற்குக் காரணமாக விளங்கினவள் யாதவப்பிரகாசருடைய தாயாரேயாவாள். அவ்வம்மையார் பேரருளாளரான வரதராசப் பெருமாளையும், திருக்கச்சி நம்பிகளையும் எப்பொழுதும் வணங்கி வருவாள். ஆதலால் வைணவ தரிசனத்தில் அவ்வம்மையாருக்கு அதிக ஊக்கம் பிறந்தது. மேலும் இராமாநுசருடைய சிறந்த அறிவும் அனுட்டானங்களும் அவ்வம்மையைக் கவர்ந்தன. ஆதலால் தம்முடைய மகனான யாதவப்பிரகாசரை அணுகி "என் அப்பனே! நீயும் இராமா நுசரைச் சரணடைந்து முக்கோற் பகவனாகி ஆதல் வேண்டும்" என்று வேண்டினாள். அதற்குப் பின்புதான், அதுவரைதான் அத்துவித மதக் கொள்கைப்படி அகற்றியிருந்த தலைமுடியையும், பூணூலையும் மறுபடியும் ஏற்று, யாதவப்பிரகாசர் பேரருளாளன் பணித்தபடி இராமாநுசரை வலம் வந்து வணங்கிச் சீடராகி முக்கோற்பகவரானார். இராமாநுசரும் இவருக்கு சங்கு சக்கர இலச்சினையைத் தோளிலிட்டு' கோவிந்ததாசர்'

என்ற தாசிய நாமத்தை அளித்துத் திருமந்திரத்தை உபதேசித்தருளினார். பின்பு யாதவப்பிரகாசர், இராமாநுசருடைய விருப்பத்திற்கு இணங்க "யதிதர்மசமுச்சயம்" என்ற நூலையும் இயற்றினார்.

இங்கு இவ்விதமிருக்கையில் ஓயாமல் திருவேங்கடவனுக்குத் தொண்டு புரிந்துவரும் பெரிய திருமலைநம்பிகள், இராமாநுசர் அனுப்பிய ஓலையைப் பார்த்து, எப்படியாவது திருக்காளத்தியில் சிவத்தொண்டில் ஈடுபட்டிருக்கும் கோவிந்தனை, இராமாநுசரிடம் சேர்ப்பிக்கவேண்டுமென்று முயன்றார். உடனே பெரிய திருமலைநம்பி, சில சீடர்களுடன் திருக்காளத்திக்குச் சென்று கோவிந்தர் நீராடிப் பூக்கொய்யுமிடத்திற்குச் சென்றார். கோவிந்தர் பூக்கொய்து கொண்டிருக்கும்போது அவர் காதில் படும் படியாக

"போதெலாம் போது கொண்டுஉன்
பொன்னடி புனைய மாட்டேன்"

என்று தொண்டரடிப் பொடியாழ்வாருடைய இனிய பிரபந்தத்திலிருந்து சிலவரிகளை நல்லிசையில் பாடினார். பூக்குடலையில் பூப்பறித்துச் சேர்த்துக் கொண்டிருந்த கோவிந்தர் இப்பிரபந்தவரிகளைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். "பொழுதெல்லாம் பூக்கொய்து திருவரங்கனுக்குச் சாத்தி அவன் திருவடிகளை அணி செய்யவேண்டும்; அப்படி நான் செய்யவில்லையே என்ற ஏக்கத்தோடு பாடிய ஆழ்வாரின் அப்பிரபந்த வரிகள், கோவிந்தருடைய உள்ளத்தை மாற்றிவிட்டது. உடனே பெரிய திருமலை நம்பிகளைச் சரணடைந்தார். பெரிய திருமலைநம்பிகளும் கோவிந்தரை நோக்கி, நீ இராமாநுசரைச் சரணடைந்து அவருடன் திருவரங்கம் சென்று திருவரங்கன் திருத்தொண்டில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். கோவிந்தரும் தம்முடைய மாமாவான பெரிய திருமலைநம்பிகளைக் குருவாக ஏற்று, அவர் வாக்கைத் தட்ட முடியாத நிலையில் இராமாநுசரைக் காண அன்றே காஞ்சிபுரத்திற்குப் புறப்பட்டார். காஞ்சிபுரத்துக்கு வந்த கோவிந்தர் இராமாநுசரைக் கண்டு வணங்கி அடியேனை ஆட்கொள்ள வேண்டுமென்று வேண்டினார். இராமாநுசரும் அவரைக் கண்டவுடன் பெருமகிழ்வெய்தி, இனி இக்கோவிந்தனைக் கொண்டு நம் கொள்கைகளைப் பரப்பிடவேண்டுமென்று திட்டமிட்டார். பின்பு திருவரங்கத்திலே இக்கோவிந்தருக்கு திரிதண்டத்தையும், துவாரடையையும் அளித்துத் துறவியாக்கினார்.

இராமாநுசர் திருவரங்கம் சேர்தல்

ஆளவந்தாருக்குப் பிறகு திருவரங்கத்தில் வைணவ தரிசனத்தைக் கட்டிக்காக்க, ஒருவருமில்லாமையால் ஆளவந்தாருடைய சீடர்களும், மற்ற பெரியயோர்களும் எப்படியாவது காஞ்சிபுரத்திலுள்ள இராமாநுசரைத் திருவரங்கத்துக்கு அழைத்து வரவேண்டுமென்று ஆலோசிக்கலாயினர். இதற்கிடையில் இராமாநுசர் துறவியாகிவிட்ட செய்தியும், கூரேசனும், முதலியாண்டானும் இராமாநுசரைச் சரணடைந்து, சீடர்களாகித் துணையாக இருந்து உதவிவருகிறார்கள் என்ற செய்தியும் திருவரங்கத்துக்கு எட்டி விட்டது. திருவரங்கத்துத் திருமால் தொண்டர்களெல்லாம் கூடிப் பெரிய நம்பியின் திருமாளிகைக்குச் சென்றார்கள். இராமாநுசர் துறவு பூண்டிருக்கும் செய்தியைத் தெரிவித்தார்கள். ஆளவந்தாரே நமக்கு இனிக் கிடைத்து விட்டார் என்று கூறினார்கள். எப்படியாவது இராமாநுசமுனியை இங்கு அழைத்து வரவேண்டும். அப்பொழுதுதான் திருவரங்கத்துக்கு ஆளவந்தார் காலத்து அழகுவரும் என்று கூறி, அதற்குத் தாங்களே வழி காட்ட

வேண்டுமென்று எல்லோரும் பெரிய நம்பியை வேண்டினர். பெரிய நம்பிகளும் நாமெல்லாம் ஆசைப்பட்டாலும், பெரிய பெருமாளாகிய அரங்கநாதர் விரும்பினாலும், காஞ்சிபுரத்திலுள்ள பெரியவர்களும், பேரருளாளனும் இராமாநுசரை அனுப்பச் சம்மதிக்க வேண்டுமே என்று கவலை கொண்டனர். பின்பு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அதாவது வரதராசப்பெருமானுக்கு இன்னிசையில் மிகவும் விருப்பமுண்டு. அதிலும் பண்ணார் தமிழ்ப் பாடல்களாகிற பிரபந்தத்தில் மெய் மறந்து கேட்கும் பண்புண்டு. ஆதலால் ஆளவந்தார் சீடரும், திருவரங்கன் திருமுற்றத்தில் தாளமிட்டு இசைபாடுபவருமான திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவரை அனுப்பி, நற்றமிழ்ப்பாடல்களால் பேரருளாளராகிற வரதராசப்பெருமாளை உவப்பித்து, ஒருவரம் கேட்கச் செய்யவேண்டும். அவ்வரத்தின்படி இராமாநுசமுனியை திருவரங்கத்துக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுவிட்டால் அவனும் இசையில் மயங்கி வரம் அருளுவான். அவ்விதம் இராமாநுசரைத் திருவரங்கத்துக்கு அழைத்து வரலாம் என்பதே அந்த யோசனை.

திருவரங்கத்துப் பெருமாளரையரும் பெரிய நம்பி முதலான பெரியயோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி காஞ்சிபுரத்துக்குப் புறப்பட்டார். பெரியகோயில் என வழங்கும் திருவரங்கத்திலிருந்து பெருமாள் கோவில் என வழங்கும் காஞ்சிபுரத்திற்கு வந்த திருவரங்கப் பெருமாள் அரையரைக், காஞ்சிபுரத்தில் பேரருளாளனுக்கு இசைபாடிக்களிப்பூட்டும் வரம் தரும் பெருமாள் அரையர் முதலிய பெரியோர்கள் எதிர் சென்று வரவேற்றனர். பின்பு எல்லாருடைய வேண்டுகோளையும் ஏற்று, திருவரங்கப் பெருமாள் அரையர் யாவரும் சூழக் கோயிலுக்குச் சென்று எம்பெருமானாகிய பேரருளாளரின் திருவோலகத்தில், "பாலேய் தமிழ்" என்றும் "பண்ணார் தமிழ்ப் பாடல்" என்றும் கொண்டாடப்படும் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப்பாடி, பேரருளாளனை உவப்பித்தார். சில பாடல் பாடல்களுக்கு நாடகமாக அபிநயம் பிடித்துப் பொருளை விளக்கினார். அப்போது பெருமாள் மிகவும் மகிழ்ந்து "உமக்கு வேண்டிய வரம் கேளும்" என்று அர்ச்சகர் வழியாக வினவினார். உடனே இதுவே தருணம் என்று, பக்கத்திலிருந்த இராமாநுசரைச் சுட்டிக் காட்டி பெருமாளே! 'இவ்விராமாநுசரை திருவரங்கத்துக்குத் தந்தருள வேண்டும்" என்று கேட்டார். அருகிருந்தார் அனைவரும் ஐயகோ; ஏமாந்து விட்டோமே என்று பதைபதைத்தனர். அரையரோ, பெருமாள் முன்பு யாரும் சொன்ன சொல்லைத் தவறக் கூடாது. ஏற்கெனவே பெருமாளின் ஆணையால்தான் யான் இவ்வரத்தை வேண்டினேன் என்று சொல்லி யாருடைய பதிலுரைக்கும் காத்திராமல் இராமாநுசருடைய கையைப் பற்றி இழுத்துப் பெருமாள் திருமுன்பே நிறுத்தினார். பேரருளாளனும் "நம்மிராமாநுசனைத் தந்தோம்" என்று திருவாக்கிட்டனன். உடனே அரையரும் எல்லாரிடமும் சொல்லி விடைபெற்றுக் கொண்டு இராமாநுசரை நோக்கிப், பெரியீர் உம்மைத் திருவரங்கனுத் தொண்டு செய்யப் பேரருளாளன் அளித்துவிட்டான். இனி என்னுடன் எழுந்தருள வேண்டுமென்று வேண்டினார். இராமாநுசரும் பேரருளாளரையும், பெருந்தேவித்தாயாரையும் வணங்கி வழிபட்டுப் பின்பு திருக்கச்சிநம்பிகளின் திருவடிகளில் தண்டனிட்டு விடைபெற்றுக் கொண்டு தண்டும், பவித்திரமுமான முதலியாண்டானும், கூரத்தாழ்வானும் மற்றும் ஆயிரக்கணக்கான திருமால் தொண்டர்களும் புடைசூழ, திருவரங்கப் பெருமாள் அரையரைப் பின் தொடர்ந்து, திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டார்.

(தொடரும்)

(212–ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகுக்கு நலம் புரியும் அழகும் இளமையும் அருளும்மிக்க முருகனைப் போலவும், விளங்க முயலுதல் வேண்டும். உலகில் ஒவ்வொரு குடும்பமும் இத்தகைய சிவகுடும்பமாகத் திகழ்தல் வேண்டும்.

"காமமே கொலைகட் கெல்லாம் காரணம்; கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாம் காரணம்; கூற்றும் அஞ்சும்
காமமே கள்ளுண் டற்கும் காரணம்; ஆத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தாகும்."

—பரஞ்சோதி முனிவர்.

ஆகலின் "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்" என்பதுதான், காமதகனம் பற்றிய கதையின் அழகிய இனிய சிறந்த நுண்பொருளாகும்.

முடிவுரை :

காமதகனம் நிகழ்த்திய பின்னரே குமாரசம்பவம் நிகழ்ந்த திறம், எண்ணியெண்ணி நுண்ணிதின் உணர்தற்பாலதாகும். "உள்ளதன் தன்மை, சத்தி, நல்லதன் தன்மை, சிவம். இவை இரண்டும் பிரிந்திருந்த நிலையில் தீமைகள் குதூகலித்துக் குதித்தன! சுவர்க்கம் இழக்கப் பெற்றது. உண்மையும் நன்மையும் (சத்தியும் சிவமும்) மணந்து ஒன்று படுதல் வேண்டும். அப்போதுதான் உலகை உய்விக்கும் தனிப்பெருந் தலைமகன் (முருகன்), தோன்றுவான். உண்மையையும் நன்மையையும் ஒன்று சேர்ப்பதற்குக் காம உணர்ச்சியின் மூலம் முயற்சி நிகழ்ந்தது. அது கண்டு இறைவனுக்குச் சீற்றம் எழுந்தது. அதன் விளைவு ஏமாற்றமாய்ப் பெரும் துன்பத்தில் முடிந்தது. இறுதியில் தவத்தினால் பெற்ற தூய்மையின் வாயிலாக, உண்மையும் நன்மையும் இணைந்து மணந்தன. தனிப்பெரும் தலைமகன் தோன்றியருளினன். தீமைகளை எதிர்த்து அழித்தான். சுவர்க்கம் மீண்டும் கிடைக்கப்பெற்றது"† என்று இரவீந்திரநாத தாகூர் அவர்கள், தாம் எழுதிய 'மனிதனின் சமயம்' என்னும் நூலிற் குறிப்பிடுவது, இங்கு நாம் அனைவரும் குறிக் கொண்டு போற்றத் தக்கதாகும்.

"ஐவணமாம் பகழியுடை அடல்மதனன் பொடியாகச்
செவ்வணமாம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி."

—சுந்தரர்.

---

† "This is the eternal problem of man. The evil spirit is exultant and paradise is lost, when Sati the spirit of Sat (Reality) is disunited from Siva, the spirit of Goodness. The Real and the Good must meet in wedlock if the hero is to take his birth in order to save all that is true and beautiful. When the union was attempted through the agency of passion, the anger of God was aroused and the result was a tragedy of disappointment. At last, by purification through penance, the wedding was effected, the hero was born who fought against the forces of evil and paradise was regained."

—Rabindranath Tagore,
The Religion of Man.